
இதழ்–55

01.01.2023

பல்சுவை மின்னிதழ்



# பெருவெள்ளத்திற்கான பயணம்

# நன்மைகள் சூழ்க... எல்லோரும் வாழ்க...




நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்குதல்களால் மிகப்பெரிய சங்கடங்களை மக்கள் எதிர்கொண்டுள்ள நிலையில் புதுவருடம் பிறக்கிறது. பல முன்னணி தனியார் நிறுவனங்கள் கூட தமது பெரும்பாலான ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்க முடியாமல் பல வருடங்களாக வேலை செய்தவர்களைக் கூட இடைநிறுத்தி வருகின்றன. அரச நிறுவனங்களும் தனியார் மயமாகத் தயாராகி வருகின்றன.

பொறியியலாளர் தொடக்கம் கூலித்தொழிலாளி வரை வேலையில்லாத் திண்டாட்டம் பலரது வாழ்க்கையைப் புரட்டிப் போட்டுவிட்டது. பிறந்த மண்ணில் வாழ்வதையே பெரும் பேறாக நினைத்திருந்தவர்கள் எல்லாம் கனத்த இதயத்தோடு இலங்கையை விட்டு வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள்.

சகல இயற்கை வளங்களையும் தன்னகத்தே கொண்டு தன்னிறைவுப் பொருளாதாரத்தை மன்னர் காலம் தொட்டே கொண்டிருந்த ஒரு தேசம் கடன் மேல் கடன் வாங்கும் தேசமாக, போதைப்பொருள் வலைக்குள் சிக்குண்ட தேசமாக மாறி ஒருவன் வாழத் தகுதியற்ற தேசமாகியிருக்கிறது. இங்கே பிறக்கும் குழந்தைகள் எல்லாம் எங்களைத்தானே சபிக்கப்போகிறது. எம் கண் முன்னே நடந்த இந்த அவலத்திற்கு நாம் அனைவருமே பொறுப்பாளிகள்.

நான் நான் நல்லாயிருப்பதைப் பற்றி யோசித்ததால்த்தான் நாடு நசுக்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. நாடு நல்லாயிருப்பதைப்பற்றி இனியாவது யோசிப்போம். தை பிறந்தால் வழி பிறக்கும் என்பார்கள். நல்ல வழிகள் பிறக்கட்டும்.

புலம்பெயர் உறவுகள் பணமாகவும் பொருளாகவும் இங்குள்ளவருக்கு உதவுவதை நிறுத்துங்கள். தொழில்வாய்ப்புகளாக உதவுங்கள். ஒரு அமைப்பாக ஒருங்கிணைந்து உங்கள் உதவிகளை திரட்டி இங்குள்ளவர்களை சொந்தக்காலில் நிற்க வையுங்கள்.

**எல்லோரும் தான் உழைத்த பணத்தில் பொங்கல் பொங்கும் நிலை வர வேண்டும்... வரும்...**

**அப்போது சொல்வோம்... பொங்கலோ... பொங்கல்...**



www.thumi.org
thumi2016@gmail.com
www.facebook.com/Thumi06

ஆசிரியர்
ச. சந்தோஷன்

இணை ஆசிரியர்கள்
ஐ.வி. மகாசேனன்
இ. வினோஜன்

திறனாய்வாளர்கள்
கு. கீர்த்தனன்

வடிவமைப்பாளர்
வ. குணநீதன்

செய்தியியலாளர்
ந. மயூரன்

# இவ்விதழில் துமித்துளை...

04 காலம் போல நாமும் புதுப்பித்துக் கொள்வோம்
07 சித்திராங்கதா
13 வயோதிபத்தில் உள ஆரோக்கியம்
17 குண்டான கிறிஸ்துமஸ் தாத்தா வேண்டாம்
18 ஒரு சின்னஞ் சிறுகதை
20 விழித்தவரெல்லாம் பிழைத்துக் கொள்வர்
18 மகிழ்ந்திருந்தால் மரண தண்டனை
23 அளவுக்கு மீறினால்
24 பரியாரியார் Vs அய்யர்
27 ஈழச்சூழலியல்
31 இறுதிநாள்
36 முதல் மூன்றும் தமிழர்
37 களைகட்டிய கட்டார் உலகக்கிண்ணம்



வாசகர்கள் அனைவருக்கும் இனிய புத்தாண்டு மற்றும் தைத்திருநாள் நல்வாழ்த்துக்கள்



## காலம் போல நாமும்

# புதுப்பித்துக் கொள்வோம்...

**'புத்தம் புது பூமி வேண்டும்**
**நித்தம் ஒரு வானம் வேண்டும்**
**தங்க மழை பெய்ய வேண்டும்**
**தமிழில் குயில் பாட வேண்டும்'**

புதிய ஆண்டு பிறந்திருக்கிறது. ஆயிரம் ஆயிரம் ஆசைகளும் இலக்குகளும் கூடவே பிறந்திருக்கின்றன. ஒவ்வொரு ஆண்டும் பூமி தன்னைப் புதுப்பித்துக் கொண்டுதான் இருக்கிறது என்பதில் இரண்டாம் கருத்திற்கு இடமில்லை. எல்லையற்ற காலத்தோடு இவ்வுலகு அழியாமல் போராடிக் கொண்டிருப்பதை தினமும் நாம் கண்கூடே காண்கிறோம்.

இந்த மாறும் உலகோடு தொடர்ந்து போராடி வென்று வந்திருக்கும் இன்னொரு ஆச்சரியம் எம் அனைவரினதும் தாய்மொழியாகும். தன்னை மாறும் யுகங்களிற்கு ஏற்றபடி எல்லாகாலத்திலும் புதுப்பித்த வண்ணமே இருக்கின்றது தமிழ். அங்ஙனம் புதுப்பிக்கப்பட்ட புதுமைகளின் வடிவங்களில் ஒன்றுதான் இதோ இப்போது நீங்கள் வாசித்துக்கொண்டிருக்கும் இந்த மின்னிதழும். இன்று உலகின் எங்கெங்கோ மூலைகளில் இருக்கும் உங்களையும் எங்களையும் இணைத்து இன்பத்தில் திளைக்க வைத்திருக்கிறது எம் தாய்மொழி தமிழ்.

எல்லையற்றது தான் காலம். ஆயினும் பூமியைப்போல் காலத்தோடு போராடி வெல்லும் திறமை மானிடர்க்கு இல்லையே.



ஏதேனும் ஒரு கால எல்லைக்குள் கட்டுப்பட்டுத்தான் மனிதன் வாழவேண்டியுள்ளது. அதன் காரணமாகவே காலக்கணக்கீடுகளும் அவனால் உருவாக்கப்பட்டன.

அந்தக் கணக்கீட்டில் இது வரையிலான வாழ்விலிருந்து புதிய வாழ்வுக்கு வாய்ப்பு உருவாவதாக ஒரு நம்பிக்கையை உருவகமாக ஏற்படுத்தி மனிதனை புத்துணர்வு கொள்ளச் செய்கிறது புத்தாண்டு. வெற்றி நோக்கி விடாது ஓடிக் கொண்டிருப்போர்க்கு ஒரு நிழற்குடையாய் நிம்மதி அளிக்கின்றன புத்தாண்டுக் கொண்டாட்டங்கள்.. ஒரு சிற்றிலக்கை எட்டி விட்ட சின்னத்திருப்தியை அது அளிக்கின்றது.

அந்தக் கொண்டாட்டத்திலே எம்மையும் நாம் உட்புகுத்திக் கொள்கிறோம். கம்பனைக் காக்க கலைமகள் சாட்சியம் சொன்ன 'தூமி' எனும் சொல்லை தூணாய் பற்றி தொடர்ந்த எம் பயணம் இன்று ஆண்டுகள் கடந்து புத்தாண்டில் பெருவெள்ளமாய் பாய்ந்து பெருமை சேர்க்கிறது நம் தமிழன்னைக்கு. தூமியாய் தொடங்கையில் நாம் கொண்ட துணிவிற்கு துணைநின்றவர் ஒரு சிலரே. இன்று எம் பெருவெள்ளப் பயணத்தில் களிப்போடு பயணிக்கும் வாசக நெஞ்சங்கள் அனைவரினதும் உள்ளக் கிளர்ச்சியை துள்ளிக் குதிக்கும் சின்னஞ் சிறார்களாய் நாம் கொண்டாடிக் கொண்டிருக்கிறோம். எம் உள்ளத்து மகிழ்வை அட்டையில் அடக்கி தூமியின் புத்தாண்டு இதழை பெருமகிழ்வோடு வெளியிடுகிறோம்.

இன்பப் பெரு வெள்ளத்தில் துள்ளிக் குதித்தோடும் சிறார்களைப் போன்று நாமும் நீங்களுமாய் தூமியோடு ஆண்டுகள் பல பயணிக்க ஆவலோடு அழைக்கிறோம்.

மார்கழி மாதத்து வைகறைப் போதில் தன் தோழியர் களையெல்லாம் துயில் எழுப்பி,
"நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!" என்று ஆண்டாள் அழைக்கிறாள் என்கிறது திருப்பாவை.
நாமும், இன்தமிழின் இனிய காதலர்களை அங்ஙனமே அன்போடு அழைக்கிறோம்.
நீராட வாருங்கள்.... இதோ தூமியின் பெரு வெள்ளத்தை நோக்கிய பயணம் இன்னும் வேகமாய் கரைபுரண்டு ஓட தயாராகிக் கொண்டிருக்கிறது.

கனவுகளைப் பிடித்து எழுதும் புதுப் படைப்பாளர்களே! கனவுகளில் திளைத்து காதற் கவிதைகள் எழுதும் நவயுக இளைஞர்களே! எல்லோரும் வாருங்கள்... பேனா எடுங்கள்... காதல் கவிதைகளிலேயே நின்றுவிடாமல் நம் ஈழத் தமிழ்ச்சமூகம் சார்ந்த சிந்தனைகளையும் தமிழ்ப் பற்றையும் வளர்த்துக் கொள்ளுங்கள்.

தமிழ் மண் வீறு கொண்டு வெற்றி தொட்டு நிற்க வேண்டிய நேரம் இது. ஈழத் தமிழ்க்கலை தன்னை தூசிதட்டிக் கொள்ள வேண்டிய தருணம் இது. புதைந்து போன மண்ணில் மறந்து போன கதைகள் ஆயிரம் உள்ளன. நீங்கள் அறிந்தவையை உங்களால் மட்டுமே சொல்ல முடியும். பேனா முனையை காகிதத்தில்

குத்தி தீயென பற்றும் நம் திமிரான தமிழை தட்டி எழுப்புங்கள்..எழுந்து நில்லுங்கள். எழுச்சி கொள்ளுங்கள். எழுத்தில் ஒரு புரட்சி செய்யுங்கள்.

தாயக வாசம் மணக்க மணக்க எழுதுங்கள். ஈழ மேடையில் உங்கள் எழுத்து துலங்க தளமிடுகிறோம் நாம். வெளியில் வாருங்கள். வெளிச்சத்தை பரப்புங்கள்.

போதும். தேனின் இனிமை காண இருதுளிகள் போதும். நம் ஒருமை சொல்ல ஒரு துமி போதும்.

நினைவில் கொள்ள ஒன்று.

**நம் வெள்ளம் கங்கைப் பெருக்கல்ல.**
**காவிரி வெள்ளமல்ல.**
**பூவிரி பொருநையின் புதுப் புனல் நீருமல்ல.**
**இது ஈழத்தில் ஓடும் இன்தமிழ் வெள்ளம்.**
**பல்கிப் பெருகிவரும் எமக்கான வெள்ளம்.**
**துள்ளிக் குதித்துத் திளைக்க வாருங்கள்.**
**புதிய ஆண்டின் புன்னகை மறக்கமுன் புதிதாய் பிறக்க வாருங்கள்!**

---

முதலாம் பரிசு - ரூபா. 15000.00
இரண்டாம் பரிசு - ரூபா. 10000.00
மூன்றாம் பரிசு - ரூபா. 5000.00




**துமி 50 இதழ்களை கடந்து பயணிப்பதை முன்னிட்டு தமிழ்க் கல்விக்கூடம் குறோளி அனுசரணையில் இலங்கை பல்கலைக்கழக மாணவர்கள் இடையே நடாத்தப்பட்ட 'ஆய்வு அரசர்கள்' என்கிற ஆய்வுப் போட்டியில் எமக்கு கிடைக்கப்பெற்ற ஆய்வுகளில் நடுவர்களால் தெரிவு செய்யப்பட்டு பரிசில் பெறுகின்ற முதல் மூன்று வெற்றியாளர்கள்...**

1. **செல்வி. தெய்வேந்திரம் வஜிதா (முதலாம் இடம்)**
2. **செல்வி. டியனி வல்த்தசார் (இரண்டாம் இடம்)**
3. **செல்வி. ஜெயபாலசிங்கம் சிவச்சித்ரா (மூன்றாம் இடம்)**

**எமது மண் சார்ந்ததும் மக்கள் சார்ந்ததுமான இவர்களது ஆய்வுகள் அடுத்த இதழ் முதல் தொடராக வெளிவர உள்ளது.**

## இருளில் ஒரு தீபம்

ஒரு சின்னப் பூத்திரியில் இருந்து சிந்துகின்ற ஒளித்துளியின் பேரழகிற்கு காரணம் யார் என்று நினைக்கிறீர்கள்? தொட்டுத் தூண்டி விடப்பட்ட அந்தத் திரியா? பற்றி எரிய வைத்த எண்ணெயா? எண்ணெயை ஏந்திய விளக்கா? இல்லை . இவை எதுவுமே இல்லை. இருள்!

இந்த ஒளித்துளியை இத்தனை அழகாய் மின்னச் செய்தது அதை சுற்றிப் பற்றியிருந்த கரிய இருள் தானே என்பதை யாராலும் மறுக்கமுடியுமா?

சங்கிலிய மகாராஜாவின் காரிருளை ஒத்த கடந்தகால நினைவுகளில் ஒரு மின்னும் பூத்திரியாய் ஒளிர்வது அவரது புதல்வி மாருதவல்லிதான். தன் மகள் பிறக்கும் போதே இறந்துவிட்டாள் என்ற பொய்யை உண்மை என்று நம்பியே அன்று ஆட்சிபீடத்தில் ஏறினார் சங்கிலிய மகாராஜா.

அரசனான பின்தான் ராஜமந்திரியார் இந்த உண்மையை சங்கிலிய மன்னரிடம் கூறினார். முன்னரே தெரிந்திருந்தால் நிச்சயம் ஆட்சி பீடமேற சம்மதித்திருக்க மாட்டார். பின்னர் தெரிந்ததால் அதை யாரிடமும் அவரால் சொல்லவும் முடியவில்லை.

ஏன்? மஞ்சரி தேவிக்கு கூட சொல்லவில்லையே. இப்போதுதான் என்ன எண்ணினாரோ தெரியாது- மஞ்சரிதேவியிடம் மாருதவல்லி பற்றிய உண்மையை சங்கிலிய மகாராஜா கூறினார்.

வீணை நரம்புகளோடு விளையாடிக் கொண்டிருந்த மஞ்சரிதேவியின்



## சித்திராங்கதா

காவ்யமோகன்

53

விரல்கள் அசைவற்று நின்று விட்டன. வீணையோடு சிலையாகிப்போனார் தேவியார். கண்களில் இருந்து மட்டும் கண்ணீர் கொட்டிக் கொண்டிருந்தது.

“ஏன் பிரபு? இந்த உண்மையை தங்கள் மஞ்சரிதேவியிடம் இத்தனை நாளாய் தாங்கள் மறைக்க வேண்டி நேர்ந்தது ஏன் பிரபு? தங்கள் புதல்வி மாருதவல்லியை இந்த மஞ்சரிதேவி தன் புதல்வியாய் நிச்சயமாய் எண்ணமாட்டாள் என்று அறுதியாய் நம்பிவிட்டீர்களா பிரபு?
இந்த அரசவையில் இளவரசியாய் வளர வேண்டியவளாயிற்றே மாருத வல்லி. அவளை இத்தனை காலம் எதற்காக இங்ஙனம் அல்லலுக்கு ஆளாக்கினீர்கள் பிரபு?
நான்... இந்த அபலை மஞ்சரிதேவி... என் புதல்வியை என்னோடு பிரியாது வைத்து வளர்த்திருக்கமாட்டேனா?
ஏன் பிரபு? ஏன்...?”

உதிரும் கண்ணீருடன் கேட்டுக் கொண்டே இருந்தார் மஞ்சரி தேவி.

“இல்லை மஞ்சரி! அப்படியில்லை.. உன்னைப்பற்றி நான் நன்கறிவேன். மாருதவல்லி மீது என்னிலும் அதிக பாசம் கொண்டவள் நீ! உன்னுடனே அவள் வளர்ந்தாள். உன்னைப்போலவே அலங்காரங் கொண்டு நானும் இந்த நாட்டின் மகாராணி என்று அவள் வேடிக்கையாய்ச் சொல்வதை பலமுறை நானே கண்டிருக்கிறேன். அதுவே உண்மை என்று எப்போதும் சொல்லமுடியாத ஊமையாய் நான் என்னுள்ளே புலம்பிய நாட்களே ஏராளம் தேவி. உன்னிடம் கூட இந்த உண்மையை மறைக்க வேண்டும் என்று நான் அறுதியாய் இருக்கவில்லை. இந்த உண்மை கடுகளவும் வெளியில் கசிந்துவிடக்கூடாது என்பதிலே நான் உறுதியாய் இருந்தேன்..”

என்று கூறியபடி தன் கரங்களினால் மஞ்சரிதேவியின் கரங்களை பற்றிக் கொண்டார் சங்கிலியமகாராஜா.

“ஆம் மஞ்சரி! கல்யாணிக்கும் எனக்கும் பிறந்த புதல்வி இறந்துவிட்டாள் என்பதையே நானும் முழுதாய் நம்பிக் கொண்டிருந்தேன். முடியரசன் ஆனபின் தான் அது பொய் என்று இராஜமந்திரியார் மூலம் அறிந்தேன். சதிகாரர்களால் எனக்கு பிறக்கப்போகின்ற உயிரிற்கு ஆபத்து வரப்போவதை முன்கூட்டியே அறிந்த திருமலை வன்னியர் யாரும் அறியா வண்ணம் எங்களிற்குப் பிறந்த புதல்வியை மந்திரியாரிடம் கொண்டுவந்து சேர்ப்பித்திருக்கிறார். இறந்தே பிறந்த குழந்தையை உடன் நல்லடக்கம் செய்துவிட்டதாய் என்னிடம் அன்று கூறினார்கள். என் கண்களில் கூட குழந்தையை காட்டவில்லை.

அச்சமயமே ராஜமந்திரியாரது துணைவியாரும் நீண்ட காலங் கடந்து கர்ப்பம் தரித்திருந்தார். துரதிஷ்டவசமாக இராஜமந்திரியாரிற்கு பிறந்த சிசு இறந்துவிட்டது. அச்சமயத்தில் தான் எங்கள் புதல்வியை திருமலை வன்னியர் இராஜமந்திரியாரிடம் சேர்ப்பித்தார். மேலும் எக்காலத்திலும் எங்கள் புத்திரிக்கு எவ்வித

ஆபத்தும் வந்துவிடக்கூடாது என்பதற்காக இராஜமந்திரியாரும் அவரது துணைவியாரும் எங்கள் புதல்வியையே தம் புதல்வியாக அனைவரும் அறியும்படி வளர்த்து வந்திருக்கின்றனர்.

எனக்கோ கல்யாணிதேவிக்கோ கூட இந்த உண்மை தெரியாது. மாருதவல்லியின் சிறுபிராயத்திலேயே இராஜமந்திரியாரது துணைவியார் இறந்துவிட்டார். அன்றிலிருந்து என் புதல்விக்கு தாயாகவும் தந்தையாகவும் இராஜமந்திரியாரே ஆகிப்போனார். முடிக்குரிய வேந்தனாய் என்னை அமர்த்திய பிறகு தான் இந்த உண்மையை எனக்கு தெரியப்படுத்தினார். அன்று நான் மட்டும் அரசனாய் ஆகியிருக்காவிடின் என் புதல்வியோடு கண்கணாத தொலைவிற்குச் சென்றிருப்பேன்.

ஆனால் அரசனான என்னால் அது முடியவில்லை. இந்த உண்மை வெளியில் தெரிந்தால் என் கல்யாணிக்கு நிகழ்ந்த அந்தக் கொடுமை என் புதல்வியையும் சூழ்ந்துவிட்டால் அதை இந்த வேந்தனால் நிச்சயம் தாங்கிக்கொள்ள இயலாது மஞ்சரி! அதனால்தான் இந்த உண்மையை என் மனதிற்குள்ளே புதைத்துக் கொண்டு என் புதல்வியை காண்கின்ற நொடிகளில் எல்லாம் ஒரு புழுவைப்போல் எனக்குள்ளே துடித்துக் கொண்டிருக்கிறேன் மஞ்சரி!”

சங்கிலியன் கண்கள் நிரம்பி வழிந்தன.

“பிரபு... மன்னியுங்கள் வேந்தே! தங்கள் வேதனை உணராமல் நான் ஏதேதோ பேசிவிட்டேன். என்னை மன்னியுங்கள்...”
சங்கிலிய மகாராஜா பற்றியிருந்த தன் கரங்களின் மீது சிரங்குவித்து அழுதார் மஞ்சரி தேவி.

“தேவி! உன் தவறு எதுவுமே இல்லை. இக்கட்டுகளிற்கு இடையில் சிக்கித் தவிக்கும் நான் தான் பெருந்தவறுகளை செய்து வருகிறேன். இப்போது கூட போரென்று புறப்படமுன் இந்த உண்மையை உன்னிடம் உரைக்க வேண்டும் என்று என் உள்மனம் உந்தியது. போரில் எதுவும் நிகழலாமல்லவா? எது நிகழ்ந்தாலும்...”

“பிரபு...!”
அவசரமாக இடைமறித்தார் மஞ்சரி தேவி.

“அப்படி ஒருபோதும் இனி கூறாதீர்கள் பிரபு! இந்த மஞ்சரி அதை தாங்கிக் கொள்ள மாட்டாள். ஆனால் உறுதியாய் சொல்கிறேன். இன்றுவரை நான் மாருதவல்லியை என் புதல்வியாகத்தான் பார்த்து வந்தேன். என்றும் அவள் என் புதல்விதான். நல்லை மண்ணின் இளவரசி எம் புதல்வி மாருதவல்லியாவாள் பிரபு..”

“மஞ்சரி தேவி! உண்மையிலேயே நீ என் பாக்கியம். உனக்கு நினைவிருக்கிறதா மஞ்சரி! அன்று மாருதவல்லியை மிக்கபிள்ளை கடத்திச்சென்ற நாள். நான் சொல்ல முடியாத வேதனையில் துடித்துக் கொண்டிருந்தேன். அன்றும் நான்



நம்பிக்கையோடிருக்க காரணமாயிருந்தவள் நீதான். இன்றும் என் எல்லா நம்பிக்கைகளுக்கும் காரணமானவள் நீதான்...”

“அன்று மாருதவல்லி கடத்தப்பட்ட போது தங்களின் வேதனையை நான் நன்கு பார்த்தேன் பிரபு. மாருதவல்லி மீது தாங்கள் கொண்ட அன்பின் மிகுதி என்றுதான் அன்று எண்ணினேன். ஆனால் புதல்வியை காணாது தாங்கள் கொண்ட வேதனையின் அளவை என்னால் இன்றுதான் உணரமுடிகிறது வேந்தே..”

“ஆம் மஞ்சரி! இந்த நாடாளும் சங்கிலியன் அன்று தவித்த தவிப்பை என்றும் மறக்கமுடியாது. தஞ்சை வீரர் என் புதல்வியை மீட்டுக் கொண்டு வந்த நொடி இருக்கின்றதே அந்த நொடிதான் என் கல்யாணிதேவியே மீண்டும் உயிர் பெற்று வந்ததைப் போல் உணர்ந்தேன்.

அதேசமயம் அன்று - மிக்கபிள்ளை சிறைபிடிக்கப்பட்டு வந்த அரசவையில் தான் எனக்கு அந்த சந்தேகமும் தோன்றியது. மிக்கபிள்ளை எதற்காக மாருதவல்லியை கடத்திச் செல்ல வேண்டும்? மாருதவல்லி மீது அவனிற்கு என்ன பகை? ஒருவேளை மாருதவல்லி பற்றிய இரகசியம் அவனிற்குத் தெரிந்திருக்குமோ? என்று கேள்விகள் என்னைக் குடைந்தன அன்று”

“அது எப்படி சாத்தியமாகும் பிரபு! தங்களிற்கும், இராஜமந்திரியாரிற்கும், திருமலை வன்னியருக்கும் என மூவருக்கு மட்டுமே தெரிந்த இரகசியம் எப்படி நம் எதிரிகளிற்குத் தெரிந்திருக்கும்? அதற்கு சாத்தியம் இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது வேந்தே..”

“இல்லை மஞ்சரி! நான் கூட அப்படித்தான் நினைத்தேன். ஆனால் என் உள்ளத்தின் குடைச்சல் கொஞ்சமும் அடங்கவில்லை. அதனால்த்தான் இரகசிய சிறைக்கு நானே சென்று மிக்கபிள்ளையை சந்தித்தேன். அவனிடமிருந்து

இந்த உண்மையை அறிய வேண்டும் என்பதற்காகவே ஈழநாட்டில் மங்கையை கவர்ந்த குற்றத்திற்கு அவனை கழுவில் ஏற்ற வேண்டும் அன்று அரசவையில் அனைவரும் சொன்னபோதுங் கூட என் கோபத்தை அடக்கி பொறுமை காத்தேன். வருணகுலத்தான் மிக்கபிள்ளையை தற்சமயம் இரகசியசிறையில் அடைப்பதே சிறந்தது எனக் கூறியதை சாதகமாக்கி மிக்கபிள்ளையை சிறையிலடைக்க உத்தரவிட்டேன்.

சிறையில் அவனை தனியாக சந்தித்துப் பேசியபோதுதான் அவன் மாருதவல்லி பற்றிய உண்மையை அறிவான் என்பதை தெரிந்து கொண்டேன்."

"பிரபு! அது எப்படி? நல்லைக் கோட்டைக்குள்ளே நான் கூட இதுவரை அறிந்திருக்காத இரகசியம் எப்படி எம் எதிரிகளிற்குத் தெரிய வந்திருக்கும்?"

"வேறு எப்படி?. நல்லை இராச்சியத்தில் முன்னை ஓர் அரக்கி இருந்தாளே... அவள் மூலம் தான்"

"யாரைச் சொல்கிறீர்கள் பிரபு? தேவி இராஜகாமினியையா?"

"அவளைத்தான்... அவள் தான் எப்படியோ கோட்டைக்குள் இந்த இரகசியத்தை அறிந்திருக்கிறாள். விடுதலை உணர்ச்சி மிகுந்திருந்த வீரனான மிக்க பிள்ளையை கூட மனம்மாற்றி காத்தோலிக்க டொம்லூயிஸ் ஆக்கியவளும் அவளேதான். தன் மாயவலையில் மிக்கபிள்ளையை சிக்கவைத்து மாருதவல்லி பற்றிய இரகசியத்தை அவனிடம் கூறி மாருதவல்லியை கவர்ந்து செல்ல வியூகம் வகுத்தவள் எல்லாமே அந்த அரக்கிதான். அவளது வஞ்சப் பார்வையில் சிக்கி அறிவிழந்து கருமமாற்றிய கைப்பாவையே மிக்கபிள்ளை என்று அவனிடம் பேசியதில் இருந்து தெரிந்து கொண்டேன்.

விடுதலை வேட்கை கொண்டிருந்த ஒரு வீரனை எப்படி தன் மாயவலையில் வீழ்த்தி காரியம் ஆற்றி இருக்கிறாள் அந்த மாயக்காரி! அவளை நினைக்கையில்... அவளை உயிரோடு அந்த வன்னிமாளிகையில் விட்டுவைத்திருப்பதே பெருங்குற்றம் என்று சிலகணம் தோன்றுகிறது. நல்ல வேளை வருணகுலத்தானிடம் அவள் மாய லீலைகள் வெல்லவில்லை. வென்றிருந்தால் எத்தனை விபரீதங்களை அது உண்டாக்கியிருக்கும்."

"யார் தஞ்சை வீரரா?.."

"ஆம் தஞ்சை வீரர் வருணகுலத்தான் தான். வருணகுலத்தானை கூட சந்தித்திருக்கிறாள் அந்த மாயக்காரி. தன் வசீகரப் பேச்சால் என்னைப் பற்றிய அவதூறைகளை பரப்பியிருக்கிறாள். ஆனால் தஞ்சைவீரர் என்னிடம் தெளிவுற வினவி உண்மைகளை அறிந்து கொண்டார்...

"நல்லவேளை... ஆய்ந்தறியும் அறிவாற்றல் கொண்டவர் தஞ்சைவீரர் என்பதால் இராஜகாமினியின்

காந்தப்பார்வை அவரிடத்தில் சக்தியிழந்து போய்விட்டது. இதுவே வேறு யாராக இருந்திருந்தால் அது எம் இராச்சியத்திற்கே பேரழிவை அல்லவா அழைத்து வந்திருக்கும். தேவி இராஜகாமினி மாயப்பார்வை கொண்டவர் என்பதை நானும் அறிவேன். ஆனால் இங்ஙனம் அபத்தமான காரியங்கள் ஆற்றவும் துணிகிற பெண்ணாய் அவள் ஆகுவாள் என்று நான் சற்றும் எதிர்பார்த்திருக்கவில்லை. நல்லை வேந்தரான தங்களை தன் மாயக்கண்களால் வீழ்த்தமுடியாமல் போய்விட்டதற்காக இப்படி எதுவும் செய்ய இராஜகாமினி துடிந்துவிட்டாள் என்று என்னால் நிச்சயமாக நம்ப முடியவில்லை பிரபு.. இருக்கட்டும்.. அவளின் விசமுயற்சிகளால் அவளால் எந்த வெற்றியையும் கண்டுகொள்ள முடியாது. மேலும் பரிதாபத்திற்குரியவளாகவே ஆகப் போகின்றாள் . ஆனால்... அது எப்படி பிரபு? நம் தஞ்சைவீரரால் வன்னிமாளிகையில் இருக்கும் இராஜகாமினியை எப்படி சந்திக்க முடிந்தது? ”

“சித்திராங்கதா!”

திரும்பி அழுத்தமாக மஞ்சரிதேவியை நோக்கி கூறினார் சங்கிலியமகாராஜா.

“ஆடலரசியா? ” வியந்து கேட்டார் மஞ்சரி தேவி.

“ஆம் அவளேதான்...”

மண்டப வாசலில் ஒரு காவல்வீரன் அவசரமாக வந்து தன் அனுமதிக்காக காத்து நிற்பதை சங்கிலியன் கண்டான்.

“யாரங்கே??” ஆணையிட்டான்.

“மன்னா! ஒலிவேராவின் படை பூநகரியிலிருந்து பின்வாங்க மறுத்து போரை எதிர்பார்த்து புறப்படுகின்றனவாம் என செய்தி கிடைத்தது. திட்டமிட்டபடி தஞ்சைவீரர் உடன் களமிறங்குகிறார் என்று தெரியப்படுத்தினார். வண்ணார் பண்ணையில் பாசறையிட்டு நாளை போரைத்துவக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறாராம். தீட்டப்பட்ட வியூகப்படி எல்லாம் நிறைவேறும் என தங்களிடம் தெரியப்படுத்தச் சொன்னார்.” பணிந்து வணங்கி விடைபெற்றான் காவல்வீரன்.

“கேட்டாயா மஞ்சரி... நல்லை மண்ணில் போர் மேகம் சூழ்ந்து விட்டது. பறங்கியனிற்கு நல்லைக் கோட்டையில் ஒரு முடிவு வரப்போகிறது. முடிவு எதுவாகினும் நினைவில் கொள் தேவி! போரில் வெற்றி காணும் வரை மாருதவல்லிக்கு இந்த உண்மை தெரிந்துவிடக் கூடாது. நான் விரைகிறேன்.”

விரைந்து புறப்பட்டார் சங்கிலிய மகாராஜா.

**பாதை நீளும்....**



ச.சஜீபன்
உதவி விரிவுரையாளர்
உளவியல் துறை

# வயோதிபத்தில் உள ஆரோக்கியம்

நீண்ட மனித வாழ்வில் வரமாகியவர்கள் வயோதிபர்களாவர்கள். “வரலாற்றின் பிரதிவிம்பங்களாகவும் திகழ்கின்றவர்கள்” எனலாம். இவர்கள் முதியோர்கள், முதிமை யடைந்தவர்கள், பெரியோர்கள் போன்ற சொல்லாடல்கள் கொண்டு அழைக்கலாம். வயோதிபம் எனும் போது மூளை நரம்பு மண்டலத்தில் ஏற்படும் அணுக்களின் முதுமை நிலை என விளக்கம் தருகிறது.

மனிதனில் பிறப்பை போன்று முதுமையும் தவிர்க்க முடியாத பருவமாகிறது. 60 வயதுக்கு மேற்பட்டவர்களை இப்பருவம் வரையறுத்து நிற்கிறது. இதில் 60-64 வயதுக்கு இடைப்பட்டோர் வயதில் மூத்தவர் எனவும், 65-74 வயதுக்கு இடைப்பட்டவர்கள் இளைய முதுமை எனவும், 75-85 வயதிற்க்கு இடைப்பட்டோர் நடுத்தர வயோதிபர் என்றும் 85 வயதிற்க்கு மேற்பட்டோர் மிக முதுமை எல்லைப்பாட்டுக்குள் உள்ளடங்குகின்றனர்.

உலகளவில் 800 மில்லியனை அடைந்துள்ள வயோதிபர்களின் எண்ணிக்கை இலங்கையில் 2.2 மில்லியனை அடைந்துள்ளமை அறியப்படக்கூடியது. தற்போது12% ஆக காணப்படும் வயோதிபர்களின் சராசரி 2050 களில் 22% ஆக மாறலாம் என எதிர்பாக்கப்படுகின்றது. இதற்கு சிறுவர்களின், ஊழியர் படையினதும் தொய்வு நிலையினை பெரும்பாலும் காரணமாகலாம். எவ்வாறாயிலும் முதியோரது சனத்தொகை அடைதலானது அதிகரித்துள்ளமை காணகூடியதாகவே உள்ளது.



இது இவ்வாறு செல்ல செல்ல இவர்களுக்கான பிரச்சனையும் பலவாறாய் வியாப்பிக்கிறது எனலாம். பெரும்பாலும் வயோதுபர்களின் பிரச்சனைக்கான காரணம் அவர்களது உள ஆரோக்கியம் பேணப்படாமையினால் ஏற்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது. இது தொடர்பான தெளிவு நிலை இன்றைய சமுதாயத்தினரிடம் காணப்படுவதாக தெரியவில்லை.

அந்த வகையில் “உள ஆரோக்கியம் என்பது உளவியல் ரீதியாக நல்ல நிலையில் மனநோயுன்றி வாழவதாகும்.” இத்தகைய உள ஆரோக்கியத்தினை பாதிக்கும் காரணிகளாக பின்வருவனவற்றை எடுகோளிடலாம். உடல்சார் காரணிகள், உளவியல் சார் காரணிகள், சமுதாய காரணிகள் என்றவாறு வகைப்படுத்தலாம்.

இவற்றுள் உடல் சார் காரணி எனும் போது எல்லா வயதினரும் இவற்றில் சிக்குண்டிருப்பர். இருந்தாலும் வயோதிபர்கள் முடி நரைத்தல், ஞாபக மறதி, நரம்பு மண்டலத்தில் ஏற்படும் தளர்வு, புலன் உள்வாங்குதல் குறைபாடு, நாளமில்லா சுரப்பிகளிலும், தசைநார்களும் ஏற்படும் சக்தி குறைவு, தொகுதி சார் பகுதிகளில் ஏற்படும் பலவீனம், நோய் எதிர்ப்பு சக்தி குறைவடைதல் போன்றவற்றை எதிர்கொள்கின்றனர்.

உளவியல் சார் காரணி எனும் போது உடலியல் சார் காரணிகளில் ஏற்படும் தொய்வு, அவர்கள் வாழ்ந்து வந்த வாழ்க்கை பின்னணி, ஆளுமைக்காரணிகள் என பல விடயங்கள் இதற்குள் ஆதிக்கம் செலுத்துகின்றன. இதன் போது முதுமை நிலையை அடைந்தவர்கள் தன் வாழ்வில் இனி வரும் நாட்களில் பற்றிய பயம், நிறைவேறதாத ஆசை பற்றிய ஏக்கம், உடல்நலம் பற்றிய கவலை, இறப்புதுயர் (கணவன், மனைவி), தனிமைப்படுத்தப்படல் என பலவற்றை கூறலாம்.



மேற்குறிப்பிட்டவை போன்று சமுதாயம் சார் காரணிகளும் உள பாதிப்பினை உண்டாக்குகின்றன. இன்றைய இளைய சமுதாயத்தினர் நவீன உலகம் என்ற பேரில் கிழடு, உதவாக்கரை, வயசு, நோய்களின் உறைவிடம் என்றெல்லாம் வயோதிபர்களை விமர்ச்சிகின்றனர். இது தவிர முதியோர் இல்லத்தில் கொண்டு போய் சேர்கின்றனர். மேலும் இன்றைய நவீன சூழலுக்கு ஒத்தும் போக முடியாமை, வறுமை, யுத்த அழிவு போன்ற காரணியும் முக்கியமானவை.

மேலே நாம் குறிப்பிட்ட மானிடனுக்கு உளம் சார் ஆரோக்கியத்தினை குறைத்து உள ரீதியான பிரச்சனைக்கு ஊக்கமளிக்கின்றன. அவ்வகையில் பாரிய உளப்பிரச்சினை, மிதமான உளப்பிரச்சனை என இது 02 வகைப்பாட்டுக்குள் உள்ளடங்குகிறது பாரிய உளப்பிரச்சினைகள் எனும் போது மாறாட்டம் (Confusion), சந்தேக உளமாய நோய் (Paranoid psychosis), அறனை பெயர்தல(Dementia) போன்றன உள்ளடங்குகின்றன. மிதான உளப்பிரச்சனை எனும் போது பதகளிப்பு, வெறுங்கூட்டு நிலை(Empty nest syndrome), இறப்பு, இழப்பு துயர் போன்றனவும் உள்ளடங்குன்றன. இது போன்ற பிரச்சினைகளில் இருந்து வயோதிபர்களை பாதுகாப்பதன் ஊடாகவே அவர்களது உள ஆரோக்கியத்தை பேண முடியும். கடவுள் எந்த உயிரையும் வீணாக படைக்கவில்லை என்பதன் படி முதுமையடைந்தோரையும், அவர்களது உள ஆரோக்கியத்தை பேணி பாதுகாக்க வேண்டியது நம் கடமை.

அந்த வகையில் அவர்களை பேணி பாதுகாக்க வேண்டிய உள ஆரோக்கியத்தை மேம்படுத்த கூடிய வழிகளை மறந்தோமா? மறுந்தளித்தமோ! என்பது கேள்விக்குறிதான் அவ்வாறான சில வழிகள் வருமாறு....

01.முதியோர்களுக்கு ஏற்படும் உடல், உள, ஆன்மீக பிரச்சினைகள், தேவைகளை போன்றவற்றை அறிந்து வைத்திருத்தல் வேண்டும்.





அதேசமயத்தில் அதனை நிவர்த்திக்கும் திட்டங்களை முன்வைத்தல் வேண்டும்.

02.இறப்புத்துயர் ஏற்படும் போது வயோதிபர்களை தனித்து விடாது அன்பு, கரிசனை, அக்கறை போன்றவற்றை வழகுதல்.

03.முதியோர் கூறும் விடயத்தினை காது கொடுத்து உன்னிப்பாக செவிமடுக்க வேண்டும். அதேசமயம் அவர்களது ஆலோசனைப்படியும் நடக்க வேண்டும் .

04.முதுமையில் உடல் , உள ரீதியாக ஏற்படும் அசௌகரிய நிலையானது சாதாரணமானது தான், என்பதை புரியவைத்து அதற்கு



முன்கூட்டியே ஆயத்தப்படுத்தல். (ஆரோக்கியமாக கையாள உதவுதல் ) Ex..ஊட்டச்சத்து உணவை வழங்கல், தியான, பொருத்தமான உடற்பயிற்சிகளை செய்ய வழிகாட்டல் . ஆன்மீக செயற்பாடுகளில் ஈடுபட உதவுதல், போதைபொருள் மீது நாட்டம் கொள்ளாது பாதுகாத்தல்

05.அவர்களுக்கு ஆர்வமுள்ள துறைகளில் தொடர்ந்தும் ஈடுபட வைத்தல். அதாவது முன்பு செய்த ஆக்கத்திறன் ரீதியான



செயற்பாடுகளை மீள்வலியுருத்தி மீண்டும் அதில் ஈடுபட வைத்தல். EX.. சமுக அபிவிருத்தி

06.அவர்களது அறிவாற்றல் தொகுதியை புத்துணர்வு செய்தல். இவ்வாறு பல வழிகளை மேற்கொள்ளலாம்.

எனவே போற்றி பாதுகாக்க வேண்டிய அரிய பொக்கிஷங்களை இன்றைய இயந்திர உலகம் என்ற பேரில் இயக்கமற்றோராய் மாற்றியுள்ளோம் என்பதனை உணர்ந்து அவர்களது உள ஆரோக்கியத்தை இனியாவது பாதுகாத்து தலை தாழ்த்தி வணங்கி தலை நிமிர்ந்து வாழ்வோம்.

# குண்டான கிறிஸ்மஸ் தாத்தா வேண்டாம்...

உடல் பருமனான கிறிஸ்துமஸ் தாத்தாக்களை வணிக வளாகங்களில் தடை செய்ய வேண்டும் என்று ஆஸ்திரேலியாவை சேர்ந்த சுகாதார நிபுணர் வின்சென்ட் கான்ட்ரா வினாட்டா வேண்டுகோள் விடுத்துள்ளார். அதிக எடை கொண்ட கிறிஸ்துமஸ் தாத்தா ஒரு மோசமான முன்னுதாரணத்தை அமைத்து அதிகமாக சாப்பிடுவதை ஊக்குவிப்பதால் அனைத்து உடல் பருமனான சாண்டா கிளாசை (கிறிஸ்துமஸ் தாத்தா) தடை செய்ய வேண்டும். சாண்டா உடல் பருமனாக இருப்பார் என்று நாம் எதிர்பார்க்கக்கூடாது. ஏனென்றால் அது தவறான செய்தியை அளித்துவிடும். நீங்கள் நிறைய சாப்பிட வேண்டும். அதை பண்டிகைகளுடன் தொடர்புப்படுத்தி கொண்டாட வேண்டும் என்பதற்கு எதிராக போராட விரும்புகிறேன். அதிக எடையுடன் இருப்பதை மகிழ்ச்சியுடன் தொடர்புபடுத்தக்கூடாது. புதிய நெறிமுறைகளை வகுத்து சாண்டா கிளாஸ் பருமன் இல்லாமல் இருக்க நான் விரும்புகிறேன். கிறிஸ்துமஸ் தாத்தா உடையின் முன்பகுதியில் தலையணைகள் அல்லது வேறு பொருட்களை திணிக்கும் பழக்கம் முடிவுக்கு வரவேண்டும். வணிக வளாகங்களில் சாண்டாவை கொழுப்பாக மாற்றுவதற்கு முயற்சி மேற்கொள்ளக்கூடாது. இது மகிழ்ச்சியான உறவு முறை மற்றும் உணவு, பானங்களின் அடிப்படையில் குழந்தைகள் நாம் நினைப்பதைவிட அதிகமாக சாப்பிடுவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.



நிலாமகன்

ஒரு சின்னஞ் சிறுகதை



# பழிக்குப் பழி...!

சென்னையின் பரபரப்பான கடல்மீன் சந்தை காசிமேடு. காசிமேட்டில் மீன் வெட்டுவதில் கைதேர்ந்தவள் ஒருத்தியைக் கண்டேன். பூங்கொடி அவள் பெயர். பூங்கொடிக்கு நான்கு வயதேயான கண்மணி என்றொரு பெண்குழந்தை மட்டுந்தான் குடும்பம். கண்மணி- தொட்டால் ஒட்டிவிடும் கறுப்பு- குண்டு குண்டான கண்கள் . பார்த்தால் யாருக்கும் பிடிக்காமல் போகாது. அதிலும் அவள் கரிய சிறிய காதுகளில் தெரியும் வெள்ளை முத்துத் தோடு வேறு ஒரு தனி அழகு.

பள்ளி விடுமுறை என்றால் கண்மணியும் பூங்கொடியுடன் காசிமேட்டிற்கு வரவேண்டியதுதான். வீட்டில் தனியாக இருக்க முடியாது. இருப்பதற்கு தனியாக ஒரு வீடும் அவர்களிற்கு கிடையாது.

அன்றும் அப்படித்தான். சதுர்த்தி விடுமுறை பள்ளிக்கு. ஆனால் கண்மணியை வைத்துக் கொண்டு மீன் வெட்டுவதுதான் பூங்கொடிக்கு இரட்டிப்பு வேலை. எதையும் சொன்னபடி கேட்கமாட்டாள்.

ஓரிடத்தில் இருக்கச் சொன்னாலும் மாட்டாள். கண்மணியின் குறும்பு அங்கிருந்த எல்லோருக்கும் வேடிக்கையாய் தெரிகையில் பூங்கொடிக்கு மட்டும் அது பொறுமையை சோதித்துக் கொண்டிருந்தது. ஒரு கட்டத்தில் அது எல்லை மீற கையில் கிடைத்த எதுவோ ஒன்றால் கண்மணிக்கு முறையாக விழுந்தது. கண்மணியின் கண்ணிலிருந்து கண்ணீர் ஊற்றியது. பார்க்க எமக்கே பாவமாகத் தான் இருந்தது. ஆனால் பூங்கொடிக்கு கோபம் அடங்கவில்லை.



கொஞ்ச நேரத்தில் பூங்கொடி எங்கோ எழுந்து செல்ல அவளுடைய இடத்தில் இருந்த அண்டாவை கவனமாக பார்த்துக் கொள்ளும் பொறுப்பை கண்மணிக்கு கொடுத்திருந்தாள். கண்மணி அண்டாக்கு காவல் . அண்டா கண்மணிக்குக் காவல். என்ன செய்வது ஆக்களை தேடிப் போய் பிடிச்சாதானே பூங்கொடிக்கும் அன்றைக்கு வருமானம்.

பூங்கொடியின் அண்டாவை அவசரமாக எடுக்க வந்து கண்மணியை கண்டதும் பார்த்து நெளிந்து கொண்டு நின்றாள் இன்னொரு மீன்வெட்டும் பெண் லட்சுமி. லட்சிமியை நிமிர்ந்து பார்த்தாள் கண்மணி.

“என்ன லெட்சுமி.. அண்டா வேணுமா? இந்தா பிடி! கொண்டுபோ... பிடி! பூங்கொடிக்கு தேவையில்லை... சும்மா தான் கிடக்கு! நீ எடுத்திட்டுப்போ.. இந்தா பிடி...”

அந்த மழலையை இரசித்தபடி சிரித்துக்கொண்டே அண்டாவை வாங்கிக்கொண்டு ஓடிவிட்டாள் லட்சுமி.

பூங்கொடியிடம் வாங்கிய அடியின் வலி இப்போதுதான் கண்மணிக்கு கொஞ்சம் குறைந்தது போல் இருந்தது.

பழி தீர்த்த திருப்தி அவளுக்குள் இருக்கையில் இனி விழப்போற அடியை பற்றியும் கண்மணிக்கு கவலையில்லை.

# விழித்தவெரெல்லாம் பிழைத்துக்கொள்வார்!






போதைப் பொருள் எனும் மாய வலையில் சிக்கி அதிலிருந்து விடுபட முயற்சிக்கிறீர்களா?

அல்லது

உங்கள் உற்ற நண்பனை அந்த வலை யிலிருந்து காப்பாற்ற நினைக்கிறீர்களா?

மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் சிகிச்சைகள் அழித்து சமுகத்திலிருந்து தொலைந்துவிட்ட உங்களை சமூகத்திற்கு திருப்பி அளிக்க தயாராக இருக்கிறார்கள்.

தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச்சபை



தொடர்புகளுக்கு 1927
(24 மணிநேர இலவச சேவை)

# போதைப் பொருட்கள் பற்றி யார் என்ன சொன்னாலும் உண்மை என்ன தெரியுமா?



→ கறுத்த உதடுகள், துர்நாற்றமான வாய், சிவந்த கண்கள், குழி விழுந்த கன்னங்கள் என்பவற்றைக் கொண்ட நோய்வாய்ப்பட்ட அசிங்கமான உடல் வெகுவிரைவிலேயே கிடைப்பதை நான் விரும்பவில்லை.

→ பாலியல் பலவீனம் ஏற்பட்டு ஆண்மைக் குறைபாட்டுடன் மகிழ்ச்சியற்ற பூரணமற்ற வாழ்க்கையை நான் வாழ இந்தப் பூமியில் பிறக்கவில்லை.

→ எனது அம்மா அப்பா கஷ்டப்பட்டு சம்பாதித்த காசை எவனோ ஒரு போதைவஸ்து தரகர் பணக்காரனாவதற்காக நான் ஏமாந்து செலவழித்து சொந்தக்காசில் சூனியம் வைக்க மாட்டேன்.



→ சினிமாக்களிலும், விளம்பரங்களிலும் காட்டப்படும் போதைவஸ்து சம்பந்தமான போலி விளம்பரங்களில் ஏமாந்து விடமாட்டேன்.

→ இந்த சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் அங்கீகாரமும் கிடைக்காது தலைகுனிந்து வாழ எனக்கு உடன்பாடில்லை.

→ ஓர் தலைமுறையை போர் தின்றுவிட இன்னோர் தலைமுறையை போதை தின்பதற்கு அனுமதிக்க மாட்டேன்.

"மெய்ப்பொருள் காண்பது அறிவு"

# மகிழ்ந்திருந்தால் மரண தண்டனை

வடகொரியாவில் மக்கள் சிரிப்பதற்கும் மது அருந்துவதற்கும் தடை விதித்து அதிபர் கிம் ஜாங் உன் உத்தரவிட்டுள்ளார். அவரது தந்தையும் வடகொரியாவின் முன்னாள் அதிபருமான கிம் ஜாங் இல் நினைவு தினத்தை முன்னிட்டு இந்த தடை உத்தரவு அமல்படுத்தப்பட்டுள்ளது. கிம் ஜாங் இல்-ன் 11வது நினைவு தினம் கடந்த 17ம் தேதி கடைப்பிடிக்கப்பட்டது. நினைவுதினத்தை முன்னிட்டு, 11 நாட்களுக்கு அந்நாட்டில் துக்கம் அனுசரிக்கப்பட்டது. இந்த நாட்களில் மக்கள் யாரும் சிரிக்கக் கூடாது, மது அருந்தக் கூடாது, கடைகளுக்குச் சென்று பொருள்கள் வாங்கக் கூடாது என்று கடுமையான தடை விதிக்கப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, இந்த 11 நாள்களில், குடும்பத்தில் யாரேனும் இறந்துவிட்டால் கூட, அவரது உறவினர்கள் சப்தம் போட்டு அழக் கூடாது, மெதுவாகவே அழவேண்டும். இந்த தடையை மீறுவோருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் என தகவல்கள் தெரிவிக்கின்றன. ஒரு வேளை, இந்த 11 நாள்களுக்குள் யாரேனும் பிறந்திருந்தால் அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுக்க தங்களது பிறந்தநாளைக் கூட கொண்டாட முடியாது என்று அந்நாட்டு ஊடகங்கள் மேற்கோள்காட்டியுள்ளன.



# அளவுக்கு மீறினால்.......

பிரசாந்தி ஜீவகன்

சிந்தனை செய்தல் சிந்தைக்கினிது தான்
அதிசிந்தனை ஆகிடில் நிந்தனை ஆக்கிடும்..
வேகம் வேண்டும் தான் வேலைகள் முடித்திட
அதிவேகம் ஆகிடின் அவசர சிகிச்சையும்
அது பலன் இல்லையேல் அகாலத்தில் "அமரர்"
ஆகுதல் வேண்டும்...
சுற்றம் சூழ்தல் சுகம் தந்திடினும்
நித்தம் போனால் முற்றமும் சலித்து
முற்றுப் பெற்றிடும்...
ஆசை கொள்ளுதல் ஆகாத செயல் அல்ல
பேராசை ஆகிடின் பெருநட்டம் சூழ்ந்து
போராட்ட வாழ்வாகும்...
வலிமை என்பது வரமே ஆனாலும்
அதிவலி ஆகிடின் அதோகதியாகி
அவலம்தான் எஞ்சிடும்...
பொறுமை பொன்னாய் போற்றப்படினும்
பொறுத்துப் பொறுத்துப் போவோர் வாழ்வு
வெறுமை ஆகி வென்றிடும் தோல்வி...
இலக்கியம் தனிலே பொறுமை வென்றிடும்
இகத்தினில் இன்னமும் இழப்பே பொறுமைக்கு..
இதனால் தானே பொறுமைக்கும் எல்லை வகுத்தோம் நாமே.....






மனைவி பரமுவுக்கு பரியாரியார் சொன்னதைப் போல ஆச்சிக்கு மருத்துவம் பார்க்க மட்டும் மகன் பரதனை பரியாரியார் அனுப்பி வைக்கவில்லை. கிட்டதட்ட இரண்டு வருடமாக பரதனைப் பிடித்திருக்கும் தீராத ஒரு வருத்தத்திற்கும் மருந்து அய்யர் வீட்டில்தான் இருந்தது. பரதன் தனக்கான மருத்துவத்தையும் பார்க்கட்டும் என்றுதான் அனுப்பி வைத்திருந்தார்.

விழுந்திருந்த மகிழமர கொப்பைத் தாண்டி, வீட்டுப் படலையைத் தாண்டி வந்து கொண்டிருந்த பரதனின் தலை தொங்கப் போடப்பட்டபடியே இருந்தது. நேராக தண்ணீர் பைப் அடிக்கு போன பரதன் முகத்தை நன்றாக தண்ணீரில் அடித்துக் கழுவினான். இல்லை! இல்லை! கண்ணீரால் கழுவப்பட்டிருந்த முகத்தை தண்ணீரால் கலப்படம் செய்தான். வாங்கில் கிடந்த பரியாரியாரையோ, குசினிக்குள் நின்ற தாயையோ அவன் கவனித்ததாகவே தெரியவில்லை.நேராக குனிந்த தலையுடனேயே தன் அறைக்குள் சென்றுவிட்டான்.

பரதன் போன கையோடு பரியாரியாரிடம் வந்தாள் பரமு. அவள் கண்களும் நனைந்திருந்தன. இதை கவனித்த பரியாரியார்,

”மருந்து என்டா கசக்கத்தான் செய்யும். க்'டமாகத்தான் இருக்கும்.

நீ கூட யோசிச்சு உனக்கு வருத்தத்த தேடாத பிள்ளை.”

”கௌசல்யா வந்திருக்கிறது உங்களுக்கு எப்படித் தெரியும்?”

பரமுவின் கேள்விக்கு உடனடியாக பதில் சொல்லாத பரியாரியார், செம்பில் கிடந்த தண்ணீரை எடுத்து கொஞ்சம் குடித்துவிட்டு செருமிக் கொண்டே பதில் சொன்னார்.

”ஆச்சிக்கு கடுமை என்டா பேத்தியை கூப்பிடாம இருப்பாங்களா? எல்லாம் ஒரு மனக் கணக்குத்தான்”

”கௌசல்யா பரதனோட கதைச்சிருப்பாளோ? என்ன நடந்திருக்குமோ என்டு பயமா இருக்கு.” பரமு பதறினாள்.



“நீ ஒன்னும் அவனிட்ட போய் இதப்பற்றி கேட்டுக் கொண்டு நிக்காத. தேவையென்டா அவனே சொல்லுவான்.”

”பிள்ளை அழுதிட்டே வந்து அறைக்குள்ள போயிருக்கு. எனக்கு பயமா இருக்குங்கோ.”

”கூட யோசிக்காத. எல்லாம் சரியாயிடும். இந்த நேரத்தில அவனைத் தனிய விடாத. இடைக்கிட போய் ஏதாவது கதைச்சிட்டு இரு.”

”சரிங்கோ. என்ன நடந்துதோ தெரியா?. பாவம் தம்பி. நான் போய் ஒரு தேத்தண்ணி போட்டு கொடுத்திட்டு வாறன்.”

பரமு திருப்ப குசினுக்குள் போனாள். பரியாரியார் அந்த விழுந்து கிடந்த மகிழமரக் கொப்பையே பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கொப்பு அவரோடு நிறையக் கதைகளை கதைத்துக் கொண்டிருக்க வேண்டும். நீண்ட நேரமாக பாரியார் அந்தப் பார்வையை மாற்றவில்லை. கண்கள் நனைந்து கொண்டேயிருந்தது.

நீங்கள் ஊகித்தது சரிதான். இந்தக் கண்ணீரின் பின்னால் காதல்க் கதைகள் நிறைய உள்ளன. அதில் ஒன்றைத்தான் உங்களால் இப்போது ஊகித்திருக்க முடியும். ஆம்! பரியாரியார் மகன் பரதனுக்கும் அய்யரின் தங்கை மகள் கௌசல்யாவுக்குமான காதல் கதை! ஊரில் பலருக்கும் தெரியாத கதையை சொல்லப்போகிறேன். ஆகையால் இயன்றவரை

என்றென்ன கட்டாயம் இரகசியமாக வைத்திருங்கள். ஏனென்றால் காதல் கத்தரிக்காய்கள் முற்ற முதல் சந்தைக்கு வந்தால் யாருக்குமே பயன் இல்லாமல் போய்விடும். காதல் பூத்து நிறைய நாட்கள்தான். ஆனால் இன்னும் கனியவில்லை இந்தக் காதல்.

சுவாரசியங்களுக்கு பஞ்சமில்லா தவை காதல் கதைகள். எப்படி உருவானது? யாருக்கு முதலில் ஏற்பட்டது? தன்னில் உருவான காதலை எவ்வாறு தான் விரும்பும் துணைக்கு தெரிவித்து அந்தத்தரப்பு விருப்பத்தையும் அறிவது? அப்படி விரும்பாவிட்டால் எப்படி விரும்ப வைப்பது? என்ன செய்தும் விரும்பாவிட்டால் என்ன செய்வது? விரும்பி சில காலங்களில் சண்டைகள் வந்து பிரிந்தால் என்ன செய்வது? பிரிவே இல்லாத காதலுக்கும் பெற்றோர் சம்மதிக்காவிட்டால் என்ன செய்வது? திருமணத்தில் முடிந்தாலும் காதல் தொடராவிட்டால் என்ன செய்வது? இப்படி ஆளுக்கு ஆளுக்கு காதல் தரும் அனுபவங்கள் வேறுபட்டவை. இன்று கண்ணீரில் வந்து நிற்கும் பரதனின் காதல் கதையும் அதற்கு விதிவிலக்கல்ல. இப்போது ஒரு கதையை மட்டும் சொல்கிறேன். கதைக்கு பின்னால் உள்ள கதையை காலம் வரும் போது சொல்கிறேன்.

**கதை வரும்...**

## மீன் தொட்டியால் வீதியில் வெள்ளம்

ஜெர்மனியின் தலைநகர் பெர்லினில் “ராடிசன் புளூ” என்கிற பிரபல நட்சத்திர ஓட்டல் அமைந்துள்ளது. இந்த ஓட்டலின் மையப்பகுதியில் 52 அடி உயரம் கொண்ட கண்ணாடியால் ஆன ராட்சத மீன் தொட்டி இருந்தது. இது உலகின் மிகப்பெரிய நிற்கும் உருளைவடிவிலான மீன் தொட்டியாக அறியப்பட்டது. “அக்வாடோம்“ என பெயரிடப்பட்ட இந்த மீன் தொட்டியில் சுமார் 10 லட்சம் லிட்டர் தண்ணீர் நிரப்பப்பட்டு 100 வெவ்வேறு இனங்களை சேர்ந்த 1,500 மீன்கள் வளர்க்கப்பட்டு வந்தன. இந்த நிலையில் சில நாட்களுக்கு முன் இந்த ராட்சத மீன் தொட்டி உடைந்து, சிதறியது. அதை தொடர்ந்து தொட்டியில் இருந்து வெளியேற தண்ணீர் ஓட்டலுக்கு வெளியே வந்து சாலையில் ஆறாக ஓடியது. தொட்டியில் இருந்த நூற்றுக்கணக்கான அரியவகை மீன்கள் தரையில் விழுந்து துடிதுடித்து செத்தன. ஓட்டலுக்குள் வெப்பநிலை, மைனஸ் 6 டிகிரிக்கும் குறைவாக சென்றதால் மீன் தொட்டியின் கண்ணாடியில் விரிசல் ஏற்பட்டு வெடித்ததாக கூறப்படுகிறது.





41

# ஈழச் சூழலியல்

த. விதுர்ஷன்
மாணவன்
கொழும்பு பல்கலைகழகம்

## மண் பாதுகாப்பு சட்டங்களில் அதிக கவனம் செலுத்தல்

குறிப்பிடத்தக்களவான சரிவு நிலங்களில் அவற்றின் இயற்கையான தாவர மூடுபடைகள் அழிக்கப்பட்டு, விவசாய நடவடிககைகள் மேற் கொள்ளப்படுகின்றன. சில தேயிலைத் தோட்டங்கள் வினைத்திறனான மண்காப்பு நடவடிக்கைகளுடன் மிகச் சிறப்பாக முகாமைத்துவம் செய்யப்பட்ட போதிலும், ஏனைய நிலங்களில் அதிகளவான விஸ்தீரணம் மண்ணரிப்பிற்கு உள்ளாகியுள்ளது. மேலும், அறுவடை செய்யும் போது மண்ணைக் குழப்பும் உருளைக்கிழங்கு, லீக்ஸ், கரட் போன்ற ஆண்டுப் பயிர்கள் மலைப்பிரதேசங்களில் குறைவான மண்காப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு பயிரிடப்படுகின்றன.

நிலங்களை மண்ணரிப்பிலிருந்து பாதுகாப்பதை உறுதி செய்யும் 1951ம் ஆண்டின் 25ம் இலக்க மண்காப்பு சட்டம் அரிதாகவே அமுல் செய்யப் படுகின்றது. அப்போது, மண்காப்பு நடவடிக்கைகளை வினைத்திறனாக மேற்கொள்வதற்கான மனித வளங்களோ அல்லது ஏனைய வளங்களோ மத்திய அல்லது மாகாண திணைக்களங்களிடமோ இல்லை. காலணித்துவ ஆட்சி காலத்தின் போது மட்காப்பில் சிறப்பான கவனம் செலுத்தப்பட்டது. அச்சமயம் நாடெங்கிலும் தகுதி வாய்ந்த அதிகளவான ஆளணியினர் நாடெங்கிலும் கடமைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். 1960 களிற்குப் பின்னர் விரல் விட்டு எண்ணக் கூடியளவிற்கு அலுவலர்களின் எண்ணிக்கைக் குறைக்கப்பட்டது. மேல் மண் இழக்கப்படல், உற்பத்தித்திறன்



குறைதல், நீர்நிலைகள் உட்பட சுற்றாடலிற்கு ஏற்படும் பாதிப்புகள் என்பனவற்றைக் கருத்திற்கொண்டு மட்காப்பில் அதிகளவான கவனம் செலுத்த வேண்டும்.

## நீர்நிலைகளின் பாதுகாவலர்களாக குடிமக்கள்

இலங்கை தனது நீர் நிலைகளைப் பாதுகாப்பதற்கு சட்டத்திலும், அதனை அமுல்செய்வதிலும் மாத்திரம் தங்கியிருக்கக் கூடாது. பெரும் எண்ணிக்கையான பாராளுமன்ற சட்டங்கள், வர்த்தமானி அறிவித்தல்கள், விதிகள் என்பன ஐம்பது வருடங்களிற்கும் மேலாக அமுலில் உள்ள போதிலும், நீர்மாசடைதல் எவ்வித தடையுமில்லாது தொடர்ந்தும் நிகழ்ந்து கொண்டேயிருக்கின்றது என்பதை நாம் கருத்திற் கொள்ள வேண்டும்.

குடிமக்கள் தமது வசிப்பிடங் களிற்கருகே உள்ள நீர்நிலைகளின் பாதுகாவலர்களாக செயற்படுவதோடு, பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, நீரை சுத்தமாக வைத்திருப்பதற்கான ஏனைய நடவடிக்கைகளில் ஈடுபடுவது ஒரு புத்திசாலித்தனமான நடவடிக்கை யாகும். இது பெரும் எண்ணிக்கையான சிறு நீர்நிலைகளிற்கு மிகவும் பொருத்தமானதாகும். ஏனெனில் இங்குள்ள நீரின் தரத்தை எந்தவொரு அரசாங்க நிறுவனமும், எவ்விதத்திலேனும் கண்காணிப்பதில்லை. பொலித்தீன் பைகள், யோகட் கோப்பைகள், வெற்றுப் போத்தல்கள், மரக்கறி, பழங்களின் கழிவுகள் என்பன பெரும்பாலான நீர்நிலைகளில் மிதப்பதை நாம் காணலாம். இதிலிருந்து இலங்கை மக்கள் சுற்றாடல் மீது தமது அக்கறையை செலுத்துவதில்லை என்பதை எடுத்தக் காட்டுகின்றது.

இதற்கு மறுதலையாக குடிமக்கள் குழுக்கள் விழிப்புணர்வுடனிருந்து தமது ஏரிகள், நீர்த்தேக்கங்கள் என்பனவற்றை மாசடையாது பாதுகாப்பதை பல உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டக் கூடியதாய் உள்ளது. டெக்சாஸ் இல் ரென்சம் கெனியோன் ஏரி மலைகளும் வனங்களும் சூழ்ந்துள்ள இரம்மியமானதொன்றாகும். அவ்



ஏரியை சுத்தமாக வைத்திருப்பதில் உள்ளூர்வாசிகள் பெரும் பங்கினை வகிக்கின்றனர். இதேவேளை ஏரியையும், அதனைச் சூழுவுள்ள இயற்கை அழகையும் இரசித்து, சுத்தமான காற்றைச் சுவாசிக்க விருந்தினர்கள் வரவேற்கப்படுகினறனர். இந்த ஏரி எவ்வகையிலேனும் மாசடையக் கூடாது என்பற்காக வருகை தரும் விருந்தினர்கள் தமது வாகனங்களை விட்டு இறங்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை.

தமது சுற்றாடலில் உள்ள நீர்நிலைகளை பாடசாலைப் பிள்ளைகளும், வீட்டுப் பெண்மணிகளும் மிகவும் அக்கறையுடன் காத்து வருவதோடு, நீர் மாசடையாதிருப்பதை உறுதி செய்வதற்கு மாசுக்களை உருவாக்குவோர், சட்டங்களை இயற்றுவோர், சட்டங்களை அமுல் செய்வோர் ஆகியோர் மீது அழுத்தங்களையும் பிரயோகித்து வருகின்றனர். உள்ளூராட்சி நிறுவனங்கள், சமூக குழுக்கள். பாடசாலைப் பிள்ளைகள், தனிப்பட்ட குடிமக்கள் ஆகியோர் தாம் வசிக்கும் சுற்றாடலில் உள்ள நீர்நிலைகளைப் பாதுகாப்பது தமது கடமையென கருத வேண்டும். இது விடயத்தில் அவர்கள் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தற்போதைய நிலையுடன் ஒப்பிடும் போது புவியிலுள்ள ஏறத்தாழ அனைத்து நீர்நிலைகளும் நூற்றாண்டுகளிற்கு முன்னர் மிகக் குறைந்தளவிலேயே மாசடைந்திருந்தன. இதற்கான பிரதான காரணம் அன்று குறைந்தளவான சனத்தொகையினர் மத்திய வாழ்க்கைத் தரத்தைக் கொண்டிருந்ததோடு, சுய சுத்திகரிப்பும் இடம்பெற்றது. சூரிய வெளிச்சம், நுண்ணுயிர்கள்,



வனங்கள், மண்ணினூ டாக வடிகட்டப்படல், ஏனைய இயற்கையான பொறிமுறைகள் என்பன நீரைச் சுத்தம் செய்தன.

தற்போதைய நிலை முற்றிலும் வேறுபட்டதாகும். சனத்தொகை மிக அதிகமாக உள்ளதோடு, தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றது, நடப்படும் எண்ணிக்கையை விட அதிகளவான மரங்கள் தறிக்கப்பட்டு வருகின்றன. மண்ணரிப்பு அதிகரித்துள்ளது, அதிகளவான எண்ணிக்கைகள் எரிக்கப்படுவதனால் வளி மண்டலத்தில் காபனீரொட்சைட்டின் செறிவு அதிகரித்துச் செல்கின்றது. இலகுவில் படியிறக்கமடையாது உயிரினங்களிற்கு தீங்கினை ஏற்படுத்தக் கூடிய புதிய பொருட்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக மாசடைவை ஏற்படுத்தக் கூடிய பல பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன.

உதாரணமாக நீரிலுள்ள குரோமியம் சிறுநீரக, ஈரல் நோய்களை ஏற்படுத்தும் என்பதை அறியாமலே சப்பாத்திற்கு பொலிவான தோற்றத்தினை வழங்குவதற்காக சப்பாத்து கைத்தொழிலில் குரோமியம் பயன்படுத்தப்படுகின்றது. சப்பாத்து கவர்ச்சிகரமாக தோற்ற வேண்டும் என்பதற்காக சிறுநீரகப் பிரச்சினைகளை ஏற்படுத்தக் கூடிய ஆபத்தான பொருட்களைப் பயன்படுத்துவது மனித முன்னேற்றமா? அல்லது மனித குலத்தின் வீழ்ச்சியா?. பனியை விட வெண்ணிறமான ஆடைகளை அணிவது மனித குலத்தின் முன்னேற்றமா? அல்லது இவ்வெண்மையைப் பெறுவதற்கு சுற்றாடலிற்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய தூய்மைப்படுத்திகளைப் பயன்படுத்தவது ஏற்கக் கூடியதா ? உலகநாடுகள், அரசாங்கங்கள், தனிப்பட்டோர் ஆகியோரின் நடவடிக்கைகள் யாவும் சுற்றாடல் மீது அக்கறை கொண்டதாக மாறுவது மிக அவசரமான தேவையாகும். காலம் எம்மீது பெரியதொரு கூட்டுப்பொறுப்பை தருவித்திருக்கிறது, அதனை தவிர்ப்போமாக இருந்தால் நிச்சயமாக தவிர்க்க முடியாத பேரிழப்புக்கு உலகம் தயாராகவேண்டி ஏற்படும். **இதற்கு ஈழமும் ஈழச்சூழலியலும் விதிவிலக்கல்ல.**

ஆராய்தல் முற்றும்.



கவிஞர் முல்லை

# இறுதி நாள்



அன்று மாலை மூன்று மணியிருக்கும். மழைக்கால மையிருட்டு. நானும் என் நண்பனும் மேயவிட்ட எருமைகளைப் பட்டி நோக்கிச் சாய்த்துக் கொண்டிருந்தோம். ஓரிரண்டு கன்றுகள் அருகிலிருந்த குட்டைக்குள் மிதந்துகொண்டிருந்தன.

“டேய்... உந்தக் கண்டுக்குட்டிகளப் போய்ச் சாய்ச்சிட்டு வா. நான் உதுகளக்கொண்டு போய் வேளைக்கு அடைக்கிறன். மழையும் வரப்போது வேகமா வா..”

அவன் எருமைகளைச் சாய்த்துக் கொண்டு பட்டியைநோக்கிப் புறப்பட்டான். நானும் குட்டைக்குள் இறங்கிக் கன்றுகளைச் சாய்த்துக்கொண்டு வருவதற்குள் அவனைக் காணவில்லை. மாடு மேய்ப்பதில் அவனை அடிக்க எங்கள் ஊரில் யாருமில்லை என்று சொல்லுமளவிற்கு, மாடு மேய்ப்பதற்குரிய நுட்பங்களை எல்லாம் அனுபவத்தால் அவன் கற்றிருந்தான். அவன் சொல்லிவிட்டுப்போன மாதிரியே கன்றுகளைச் சாய்த்துக் கொண்டு வருவதற்குள் போதும்போதுமென்றாகிவிட்டது. கன்றுகளைப் பட்டிக்குள் அடைத்துவிட்டு வீடு செல்வதற்குள் மின்னி, முழங்கி மழையும் ஒருபாடு அடித்து ஓய்ந்தது. வந்த வேகத்தில் நான்கு வாளி வார்த்துவிட்டுத் தலையை உலர்த்திய குறையோடு கட்டிலில் சரிந்தேன். நேரம் மூன்றரையைத் தாண்டிக்கொண்டிருந்தது.

“அண்ணா.. அண்ணா.. உன்ர போன் அடிக்குதுதண்ணா...”

சத்தம் போட்டபடி என் தங்கச்சி ஓடிவந்தாள். மாடு மேய்த்த அலுப்பில் நித்திரைத் தூக்கத்தோடு கைபேசியை வாங்கிக் காதில் வைத்தேன்.

“குட்ஈவினிங்... ஜப்(க)னா யூனிவேசிற்றி, ஆட்ஸ் டீன் ஒப்பீஸ்ல இருந்து கதைக்கிறம். உங்களுக்கு அசிஸ்ரண்ட் லெக்சரர் வேர்க் கிடைச்சிருக்கு. நீங்க மண்டே வந்து அப்பொயிண்மெண்ட் லெட்டர் எடுக்கலாம்.”

அவ்வார்த்தைகள், எனக்கு மீண்டும் ஒருதடவை மின்னி, முழங்கி மழைபெய்து ஓய்தாற்போலிருந்தது. தங்கச்சி ஓடிப்போய் அம்மாவுக்குப் பறையடித்தாள். மகிழ்ச்சிப் பூரிப்பில் கட்டிலில் குதித்தேன். சைக்கிளை எடுத்துக்கொண்டு மலையடிவாரத்திற்குப் போய்க் கூவென்று கத்தினேன். எனக்குப் போட்டியாய் நரிகளின் ஊளைச்சத்தம், மலைகளில் எதிரொலித்துக் காட்டையே அமைதியாக்கிற்று.

இவ்வளவு நாள் பட்ட வேதனைக்கு இப்போதுதான் விடிவு கிடைத்திருப்பதாக நினைத்தேன். 1990ஆம் ஆண்டு இனப்பிரச்சினை மேலோங்கிய காலத்தில், எங்கள் ஊரைவிட்டு முல்லைத்தீவுப் பகுதிக்குப் பெற்றோர் இடம்பெயர்ந்திருந்தனர். அப்போர்ச் சூழலில்தான் நானும் பிறந்தேன். வன்னிப்போர் தந்த அவலங்களையெல்லாம் அனுபவித்து முள்ளிவாய்க்கால் முடிவோடு இராணுவத்திடம் சரணடைந்தோம். செட்டிக்குளம் "சோன் பைவ்" திறந்தவெளிச் சிறையில் சுமார் ஒரு வருடம் தங்கவைக்கப்பட்டுப் பின்னர் ஊருக்கு மீள்குடியேற்றம் செய்யப்பட்டோம். அது ஒரு யானைக்காடு. அங்கு மின்சாரமே இல்லை. காடுவெட்டித் தற்காலிகக் கொட்டில்போட்டு வசிக்கவேண்டிய சூழல். வறுமையே சூழ்ந்திருந்தது. கையில் பணமில்லை. தினக்கூலிசெய்து வாழவேண்டி நிலை. பட்டினி வேறு. அப்போது, நான் தரம் பதினொன்று படித்துக் கொண்டிருந்த காலம். பள்ளிக்கூடத்தில் கொடுக்கும் சாப்பாடுதான் அப்போது எங்களையெல்லாம் வாழவைத்துக் கொண்டிருந்தது.

ஊரிலே பயிர்கொடியே இல்லை. ஊருக்குள் வரும் காட்டுயானைகள் ஊரையே வெட்டையாக்கியிருந்தன. இரவில் படிப்பதற்குக்கூட சிறந்த விளக்கு இல்லை. ஜாம் போத்தல் விளக்குத்தான். விளக்கிற்கு எண்ணெய் வாங்கவே காசு இருக்காது. யானைக்குப் போடும் தீவறை வெளிச்சத்தில் எத்தனையோ நாட்கள் படித்த ஞாபகம் இன்னும்தான் என் மனதில் ஆழமாய்ப் படிந்திருக்கிறது.

"சேர் வீட்ட கரண்ட் இல்ல சேர்... இரவில படிக்க முடியேல்ல... அப்பாக்கும் வேலையில்லை சேர்... வீட்ட கஷ்ரம் சேர். பள்ளிக்கூடத்தில தாற சாப்பாட்டத்தான் வாங்கிக்கொண்டுபோய் வீட்ட சாப்பிடுறனாங்கள் சேர். சேர் நான் நல்லா படிப்பன் சேர் இரவில பள்ளிக்கூட முன் மண்டபத்தில எரியிற லைற்றில இருந்து படிக்கவிடுவியளா சேர்?"

ஒருநாள் அதிபரின் முன் மண்டியிட்ட ஞாபகம் இன்றும் நினைவில் இருக்கிறது. மனம் கலங்கி விட்டார். அன்றிலிருந்து பள்ளிக்கூடத்து வெளிச்சத்திலேயேதான் இரவில் படிப்பதுண்டு. போருக்குப் பின்னர் புதிதாக மீள்குடியேற்றப்பட்ட ஊர் என்பதால் இங்கு எவ்வித வசதிகளும் இல்லை. எல்லாவற்றிற்கும் பட்டணத்திற்கே போயாக வேண்டும். அதனால்

தனியார் வகுப்புக்களே எங்களுக்குத் தெரியாது. பள்ளிப்படிப்போடு ஒன்பது பாடங்களிலும் சித்தியடைந்தாலும், உயர்தரப்படிப்பு இல்லாத எங்களூர் பள்ளிக்கூடத்தில் எப்படிப் படிப்பது? பட்டணம் போய்த்தான் படிக்க வேண்டும். படிப்பதற்கேற்ற வசதியும் இல்லை. அப்படியிருந்தும், என் தந்தை தினக்கூலி செய்து என்னைப் பட்டணத்தில் படிக்க வைத்தார்.

"தம்பி... எங்களிட்ட இப்ப ஒண்டுமில்லையப்பு.. உன்ர படிப்பு மட்டும்தான் எங்கட சொத்து! நாங்க படிக்காம விட்டிற்றம்.. நீ சாகிற வரைக்கும் நல்லா படிக்கோணும்... அதுமட்டும் போதுமப்பு.. நாங்க காணாத உலகத்தை நீ பார்க்கோணுமப்பு..."

அடிக்கடி அப்பா சொல்லும் இந்த வார்த்தைகள் இன்றும் நினைவில் இருக்கின்றன. இரவு தூக்கமே வரவில்லை. எப்போது விடியுமெனக் காத்திருந்து, காலையில் பேருந்து ஏறி யாழ்ப்பாணம் வந்துவிட்டேன். தொலைதூரப் பயணத்தால் சனி பறந்து ஞாயிறு மலர்ந்தது. திங்கள் காலை ஒன்பது மணியிருக்கும். நியமனக் கடிதத்தை வாங்கிக்கொண்டு தமிழ்த்துறைக்குச் சென்றேன். கிளாக் அண்ணனின் பற்கள் மின்னி ஒலித்து என்னை வரவேற்றன.

"எஸ்கியூஸ்மி சேர்"
அமைதியாய் என் குரல் ஒலித்து ஓய்வதற்குள்,
"ஓம் வா வா வா..."
துறைத் தலைவர் என்னைப் புன்னகைத்து வரவேற்றார். ஈழத்து நாவலிலக்கிய ஆய்வு உலகில் தனக்கான அடையாளத்தை உருவாக்கிய பேராசிரியர் அவர். நவீன - மரபு இலக்கியத்தில் நல்ல வாரப்பாடுடையவர். அவரிடத்தில் எனக்கும்தான் நல்ல வாரப்பாடு.

"தம்பீ... இண்டையில இருந்து நீயும் எங்களில ஒருத்தன். யாற்ற



தனிப்பட்ட வேலையும் நீ இஞ்ச செய்யக்கூடாது. டிப்பார்ட்மெண்ட் வேல மட்டும்தான் செய்யோணும்.”

“சரி சேர்…”
கூனிக்குறுகி அமைதியாய் நின்றேன்.

“எந்த மேசையில இருக்கப்போறாய்?”
திரும்பிப் பார்த்தேன். மூன்று மேசைகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசைகள் நோக்கியிருந்தன.

“சேர் நான் அந்த மேசையில இருக்கிறன் சேர்.”
முன்னுக்கு இருந்த மேசையைக் காட்டினேன்.

“சரி நீ உனக்கு விரும்பின எந்த இடத்திலயும் இருக்கலாம்.”

“சரி சேர்…”
ஓடிவந்து எனக்குரிய இருக்கையில் அமர்ந்துகொண்டேன். என் நீண்ட நாள் கனவு பலித்த தருணம். மனம் வானத்தில் இறக்கை கட்டிப் பறப்பது போலிருந்தது. பேராசிரியர்களும், விரிவுரையாளர்களும் வாழ்த்தி வரவேற்றார்கள். ஒரே குடும்பம்போல் உறவாடினார்கள். நாட்கள் நகர்ந்தன. எனக்குரிய கடமைகள் வகுக்கப்பட்டன. விரிவுரைகள் தவிர எனக்கு எந்த வேலைகளும் தரப்படவில்லை. நான் சுதந்திரப் பறவையானேன். படித்தேன்… எழுதினேன்… எழுத்துக்களால் என்னை வளப்படுத்தினேன்.

“சேர் ரீ குடிச்சிட்டு வாறன் சேர்”
“சேர் சாப்பிட்டு வாறன் சேர்”
“சேர் பாத்துரூம் போயிற்றுவாறன் சேர்” என்று அவருக்கு முன்னால் அடிக்கடி போய்நிற்பதுண்டு.

“தம்பீ பல்கலைக்கழகத்துக்குள்ள எங்க போறதெண்டாலும் என்னட்ட சொல்லத்தேவேல… நீ எங்கயெண்டாலும் போகலாம். உன் கடமையைச் சரியாய்ச் செஞ்சாச்சரி.”

ஒருநாள் இவ்வார்த்தைகள் கட்டளையாய் என்னை வந்து சேர்ந்தன. அன்றிலிருந்து நான் பல்கலைக்கழகத்திற்குள் எங்கு செல்வதானாலும், அவரிடம் சொல்லாமலேயே சென்று வருவதுண்டு. இதனால் எல்லா நண்பர்களும் என் சுதந்திரத்தைப் பார்த்துப் பொறாமைப்பட்டதுமுண்டு.

“நாங்க மாடுமாதி சாகிறம். டிப்பாட்மெண்டில அசைமண்ட் திருத்தி முடியாம வீட்டிலயும் கொண்டுபோய் திருத்த வேண்டியதாயிருக்கு. அதுமட்டுமில்லாம டிப்பாண்ட்மென்ட் ஹெட்டின்ர மோட்டசைக்கிளுக்கு பெற்றோலடிக்க லைன்லவேற நிக்கவேண்டியதாக் கிடக்கு. சீ… ஒரு சுதந்திரமே இல்லாம நாங்க இருக்கம். உனக்கென்னடாப்பா.. நீ சுதந்திரமா திரியுறா…”

“ஓம்.. எங்கட டிப்பாட்மெண்டில எல்லாரும் தங்கட தங்கட வேலையத் தாங்களே செய்யிறதால எனக்குப் பறவாயில்லை. நான் எனக்குரிய வகுப்பை எடுத்திட்டு.. என்ர பாடத்துக்குரிய அசைமெண்ட்டத் திருத்திவைச்சாச் சரி. அதுதான் நான் சுதந்திரமாத் திரியிறன். லைபிறறி போறன்.. படிக்கிறன். எழுதிறன்…”

பிறதுறை நண்பன் என்னிடம் புலம்பிய வார்த்தைகளுக்குப் பதிலளித்துவிட்டு

“எங்கட துறைத்தலைவர்போல யாரும் கிடைக்கமாட்டினம்” என்று மனதுக்குள் நினைத்துக்கொண்டு புறப்பட்ட நாட்கள் கொஞ்சநெஞ்சமல்ல. காலை ஏழு மணிக்கே ஒப்பீஸ் வந்து தனக்கான கடமைகளைச் செய்ய ஆரம்பித்துவிடுவார். பன்னிரண்டிற்கு மதியச்சாப்பாட்டுக்குக் கிளம்புவார்.

“தம்பீ சாப்பிட்டிற்றியே?” அவர் மதியம்போய் வருகிறபோது இக்கேள்வியை என்னிடம் கேட்கத் தவறுவதில்லை.

“சேர் இந்தக் கட்டுரைய ஒருக்காப் பாத்துத் தாங்க சேர்..” ஆய்வுக் கட்டுரைகளை எழுதிவிட்டு அவரின் மேசையில் வைத்துவிடுவேன். என்ன வேலையிருந்தாலும் ஒவ்வொரு வரியாகப் பார்த்துத் திருத்தித் தருவார். தேவைப்படின் அறிவாலும் என்னைத் திருத்துவார்.
நாட்களும் நகர்ந்தன.. கிழமைகள் பெருகின.. மாதங்கள் கடந்தன..

“வேலையும் முடியப்போது... இனி வீட்ட போய் என்னத்தச் செய்வன்? விடையே தெரியாத இவ்வினா மனதில் ஆயிரம் தடவைகள் தோன்றி மறைந்தது. வருடம் ஒன்றாகியது.
அன்று வேலை இறுதிநாள். என் மகிழ்ச்சிக்கே இறுதிநாள் என்பது பின்புதான் தெரிந்தது. நண்பர்கள் வந்தார்கள், புகைப்படம் எடுத்தார்கள். மாணவர்கள் வந்தார்கள், பிரியாவிடை வைத்தார்கள். விரிவுரையாளர்கள், வந்தார்கள் ஆறுதல் கூறினார்கள். எதனையும் மனம் ஏற்கமறுத்து ஒப்பாரி ஓலத்தில் புலம்பி அழுதது. உள்ளம் உடைந்து உருகியது.

ஆனாலும் எனக்கு ஒரு நம்பிக்கை. இப்போதெல்லாம் நான் என்னைக் கற்றல், கற்பித்தல் ரீதியில் பலப்படுத்தியிருந்தேன். ஆய்வுலகில் ஈடுபாடு காட்டிக்கொண்டிருந்தேன். தொடர்ச்சியான வாசிப்புக்களாலும், எழுத்துக்களாலும் என்னை வளர்த்துக்கொண்டிருந்தேன். துறைத்தலைவர், திறமை அடிப்படையில் எனக்கு மறுபடியும் ஒரு வருடம் வேலை வழங்குவார் என்று மனதில் உறுதியுடன் இருந்தேன். அவரிடம் அவ்வளவு நம்பிக்கை இருந்தது. என்னை வளர்த்துவிட்ட பெருந்தகை, என்னை நூலறுந்த பட்டமாய் விட்டுவிட மாட்டார் என நம்பியிருந்தேன். பல துறைகளில், இரண்டு வருடங்களாகத் தொடர்ந்தும் சில தற்காலிக விரிவுரையாளர்கள் பணியாற்றிக் கொண்டிருப்பதும் என் நம்பிக்கையைப் பலப்படுத்தியிருந்தது.

என் நண்பர்கள், விரிவுரையாளர்கள் என்று எல்லோரும், எனக்கு மறுமடியும் வேலை கிடைக்கும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தியிருந்தனர். அவர் என் பேராசிரியர். என் குருநாதர். என்னை வளர்த்து விட்டவர். எனக்கு வேலை தந்தவர். என்னைக் கைவிட மாட்டார் என்ற சிந்தனைகள் மனதில் ஓடித்திரிந்துகொண்டிருக்கப் பல்கலைக்கழக வளாகத்தைச்

சுற்றிவந்து நினைவுகளை அசைபோட்டேன். சுயநினைவுக்கு வந்தவனாய் அலுவலகத்தை அடைந்து இருக்கையில் அமர்ந்தேன். மேசையில் தலை சாய்ந்தேன். நேரம் வேகமாய் நகர்ந்து நான்கு மணியானது. துறைத்தலைவர் ஏதோ எழுதிக்கொண்டிருந்தார். எழுந்து அருகில் சென்றேன்.

“சேர்.. போயிற்று வாறன் சேர்”
“ம்... சரி! பிறகு சந்திப்பம்”
வேறு வார்த்தை வரவில்லை. அண்ணாந்து பார்த்துவிட்டு மீளவும் குனிந்து எழுதத்தொடங்கினார். மனது வெடித்துக் கதறியது. உள்ளம் குமுறியது... உடல் படபடத்தது.. கண்கள் குளமாகக் கிளாக்கைப் பார்த்துத் தலையசைத்து விடை பெற்றபடி நானிருந்த மேசையைத் திரும்பிப் பார்க்கிறேன்...

கண்ணீர், துளிகளாகி நிலத்தை நனைத்தன. காத்திருந்து காத்திருந்து காலைவாரிய உலகத்தில், திறமைக்கு அடையாளம் தந்து என்னைச் செதுக்கிய உத்தமர் இறுதியில் மௌனமாய் விடைதந்து நின்றார். பிரியா விடைதந்து நின்றார். மேய்ப்பனை இழந்த மந்தையானேன். காரணம் அறியாமலேயே என் கால்கள் பேருந்துச்சாலையை நோக்கி நகர... விம்மி விம்மி ஆட்பரித்து அழுகின்றேன். என் கிராமத்து வயல்வெளிகளும், எருமை மாடுகளும், வரண்ட மலைக்காடுகளும் என் கண்முன்னே வந்து செல்கின்றன....

*****

## முதல் மூன்றும் தமிழர்

அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையிலான ஆண்களுக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தல் போட்டியில் முதல் மூன்று இடங்களையும் யாழ். மாவட்ட பாடசாலைகள் பெற்று சாதனையைப் பதிவு செய்துள்ளனர். இந்நிலையில் 20 வயதிற்குட்பட்ட ஆண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த சொபிசன் 4.10 மீட்டர் பாய்ந்து தங்கப் பதக்கத்தை பெற்றுக் கொண்டுள்ளார். இதேவேளை தெல்லிப்பளை மகாஜன கல்லூரியைப் பிரதிநிதித்துவபடுத்தும் கஸ்மிதன் 3.90 மீட்டர் பாய்ந்து வெள்ளிப் பதக்கத்தையும், அளவெட்டி அருணோதயக் கல்லூரியைப் பிரதிநிதித்துவம் செய்த இ.அபிநயன் 3.80 மீட்டர் பாய்ந்து வெண்கல பதக்கத்தையும் வெற்றியீட்டி உள்ளனர்.





வை. கரன்




கால்பந்து உலக கிண்ணம் உலகளவில் மிகவும் எதிர் பார்க்கப்படும் ஒரு விளையாட்டுத் திருவிழா. எனினும் இம்முறை கட்டாரில் இடம்பெற்ற உலக கிண்ணம் பல சர்ச்சைகள் மற்றும் எதிர்ப்புகளின் மத்தியில் எதிர்பார்ப்பிற்கு குறைவில்லாமல் நடந்தேறியுள்ளது.

2022 FIFA உலக கிண்ணத்தை நடாத்தும் நாடாக Qatar 2010 ஆம் ஆண்டு FIFA நிறைவேற்று குழுவினால் தீர்மானிக்கப்பட்டது. உலக கிண்ணத்தை Qatar நடாத்தும் என முடிவு செய்யப்பட்ட நாளிலிருந்து 2022 Qatar உலக கிண்ணம் தொடர்பான சர்ச்சைகள் எதிர்பார்ப்புகளை மீறி உச்சம் தொட்டன. எனினும் பல காரணங்களுக்காக Qatar உலக கிண்ணம் விசேடமானது. அரபு நாடுகளில் இடம்பெறும் முதலாவது கால்பந்து உலக கிண்ணமாக இது பதிவாகியுள்ளதுடன் ஆசியாவில் இடம்பெறும் இரண்டாவது உலக கிண்ணம் இதுவாகும்.



கிடைக்கப்பெற்ற வாய்ப்பில் உலகை மிரள வைக்க பெருத்த பொருட் செலவில் உலக கிண்ணத்திற்கான ஆயத்தங்களை செய்தது Qatar. ஒட்டு மொத்தமாக 220 பில்லியன் இவ் உலகக்கிண்ணத்திற்கான செலவாக கணக்கிடப்பட்டுள்ளது. இது முந்தைய உலக கிண்ணத்திற்கான செலவை விட 10 மடங்கிலும் அதிகமாகும். **(2014 - 18Bn, 2018 - 14Bn)**




இவ்வாறு பிரம்மாண்டமாக தயாரான உலக கிண்ணத்தின் ஆச்சர்யங்கள் தகுதிச்சுற்று ஆட்டங்களிலேயே ஆரம்பித்தது. ஐரோப்பிய தகுதி சுற்று ஆட்டங்களில் **Ronaldo** இன் **Portugal** மற்றும் 4 முறை சாம்பியன்களான **Italy** நேரடியாக உலக கிண்ணத்திற்கான தகுதியை இழந்து தகுதிக்காக **Playoff** சுற்று ஆட்டங்களுக்கு தள்ளப்பட்டன. **Playoff** ஆட்டங்களில் **Italy** உலக கிண்ணத்திற்கான வாய்ப்பை இழக்க **Portugal** இறுதி வாய்ப்பில் தகுதி பெற்றது. 2020 **Euro** கிண்ணத்தை வெற்றி கொண்டு ஐரோப்பிய சாம்பியன்களாக முடிசூடிய **Italy** உலக கிணத்துக்கு தகுதி பெறாது வெளியேறியது. அதே போன்று **Colombia**, **Chile**, **Sweden**, **Peru** அணிகள் உலக கிண்ணத்திற்கு




தகுதி பெறும் வாய்ப்பை இழந்தன. **Russia** தகுதி சுற்று ஆட்டங்களில் சிறப்பான பெறுபேறுகளை வெளிப்படுத்தி இருந்தாலும் **Ukraine** மீதான போர் காரணமாக உலக கிண்ணத்தில் பங்கு பெற தடை விதிக்கப்பட்டது.

பலத்த போட்டிகளின் மத்தியில் **Qatar** மற்றும் தகுதி சுற்று ஆட்டங்கள் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 31 அணிகள் உலக கிண்ணத்தை கைப்பற்ற களமிறங்கின. எனினும்



இவ்வாண்டு உலக கிண்ணத்திற்கான எதிர்பார்ப்புக்கள் இரு அணிகளை மையப்படுத்தி அதிகம் பேசப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி கால்பந்து வரலாற்றில் என்றும் அழியாமல் இடம் பிடிக்கவல்ல பொற்காலப்பகுதி. அதற்கு முதற் காரணமானவர்கள் **Cristiano Ronaldo** மற்றும் **Lionel Messi** எனும் இரு பெரும் கால்பந்து ஆளுமைகள். அனேகமாக அனைத்து சாதனைகளையும் தன்வசப்படுத்திய இவ்விரு பெரும் ஆளுமைகளுக்கும் எட்டாக்கனியாக இருந்து வந்த உலக கிண்ணத்தை கைப்பற்ற இது



இருவருக்கும் இறுதி வாய்ப்பாக கருதப்பட்டது. அதற்காகவே Argentina எதிர் Portugal அணிகள் இறுதி போட்டியில் மோதுவது குறித்த எதிர்பார்ப்புக்கள் மற்றும் கணிப்புகள் கால்பந்து உலகில் நிறைந்திருந்தது. அதற்கேற்றால் போல் Messi இன் Argentina Copa America மற்றும் Finalissma என இரு சர்வதேச கிண்ணங்களை வெற்றி கொண்டு உலக கிண்ணத்திற்காக களமிறங்கியது. மறு புறம் Portugal பலமான அணியாக களமிறங்கினாலும் உலக கிண்ணப் போட்டிகளுக்கு முன் Ronaldo வை சுற்றி அரங்கேறிய சம்பவங்கள் மற்றும் அதற்கான எதிர் வினைகள் Portugal அணியை சற்று பின்னடைவிற்குள்ளாக்கியது. சர்ச்சைகளால் சூழ்ந்திருந்த Ronaldo உலக கிண்ணம் ஆரம்பிக்க சற்று முன்னர் Manchester United கழகத்தினால் அவரது ஒப்பந்தம் முடிக்கப்பட்டு வெளியேற்றப்பட்டிருந்தார்.

Messi Ronaldo தவிர்ந்து Luka Modric in Croatia. Belgium அணியின் Golden Generation, Brazil இன் Neymar, Superstars நிறைந்திருந்த France, Germany, Spain, England என உலக கிண்ணம் தொடர்பான எதிர்பார்ப்புகள் நிறைந்திருந்தது.

எனினும் பல நட்சத்திர வீரர்கள் காயம் மற்றும் பிற காரணங்களினால் 2022 உலக கிண்ணத்தை தவறவிட்டிருந்தார்கள். Paul Pogba, N'Golo Kante, Timo Werner, Reece James, Sergio Ramos, Marco Reus, Sadio Mane, Nicolas Gonzalez, Karim Benzema, Gabriel Jesus என பெரும் நட்சத்திரப் பட்டாளம் உலக கிண்ணத்தில் விளையாடும் வாய்ப்பை இழந்திருந்தனர்.

## குழு நிலை ஆட்டங்கள்

கோலாகலமாக November 20 ஆம் திகதி ஆரம்பித்த Qatar உலக கிண்ணம் முதல் போட்டியிலேயே சாதனைகள் படைத்தது. முதல் முறையாக போட்டியை நடத்தும் நாடு முதல் போட்டியில் தோல்வி என்ற வரலாற்றை Qatar இடம் கையளித்தது Ecuador. முதல் போட்டியில் போட்டியை நடாத்தும் நாடான Qatar இற்கு அதிர்ச்சியுடன்





ஆரம்பித்த உலக கிண்ணம் அடுத்தடுத்த போட்டிகளில் கால்பந்து ஜாம்பவான்களை கலங்கடித்தது. 35 போட்டிகளில் தொடர்ச்சியாக தோல்வி பெறாமல் சாதனையுடன் களமிறங்கிய **Messi** யின் **Argentina** அணிக்கு முதல் போட்டியிலேயே அதிர்ச்சியளித்தது **Saudi Arabia.** எனினும் கனவுகளுடன் களமிறங்கிய **Messi** மற்றும் அணியினர் அடுத்தடுத்த போட்டிகளில் வெற்றி பெற்று **Knockout** சுற்றுக்குள் நுழைந்தனர்.

குழு **E** இல் **Japan Germany, Spain** என 21 ஆம் நூற்றாண்டின் உலக கிண்ண வெற்றியாளர்களை திணறடித்து குழு **E** இன் வெற்றியாளர்களாக அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது. **Germany** 2018 போன்று இம்முறையும் குழு ஆட்டங்களுடன் வெளியேறியது. அதே போன்று குழு **F** இல் **Croatia, Belgium** அணிகளை மீறி **Morocco** முதலிடம் பிடித்ததுடன் **Belgium** அணி குழு நிலையில் வெளியேறியது.

குழு நிலைப் போட்டிகளின் இறுதியிலும் **Cameroon Brazil** அணியையும் **South Korea, Portugal** அணியையும் வீழ்த்தி அதிர்ச்சியளித்திருந்தன.

## Round of 16 போட்டிகள்

குழு நிலையில் சிறப்பாக செயற்பட்டு அடுத்த சுற்றுக்கு தெரிவான 16 அணிகள் **Round of 16** போட்டிகளல் மோதின. **Round of 16** ஆட்டங்களின் முடிவுகள் பெரும்பாலும் எதிர்பார்த்தது போன்றே அமைந்திருந்தாலும் **Spain** அணியை வீழ்த்தி **Morocco** அணி சாதனை படைத்தது.

## காலிறுதி போட்டிகள்

காலிறுதி ஆட்டங்களிலும் **Morocco** அணியே பேசு பொருளாக அமைந்தது. **Portugal** அணியை வீழ்த்தி **Ronaldo** இன் உலக கிண்ண கனவை மூழ்கடித்து அரை இறுதி போட்டிகளுக்கு தெரிவான முதல் ஆபிரிக்க அணியாக சாதனை படைத்தது **Morocco.**

உலக கிண்ணத்தை வெல்வதற்கு அனைவராலும் எதிர்பார்க்கப்பட்ட **Brazil** அணியின் உலக கிண்ணப்





பயணமும் காலிறுதியில் முடிவுக்கு வந்தது. Croatia அணியுடனான காலிறுதி போட்டியில் Penalty Shootout முறையில் தோல்வியுற்று வெளியேறியது Brazil.

மற்றைய ஆட்டங்களில் Argentina Netherlands அணியையும் France, England அணியையும் வீழ்த்தி அரை இறுதிக்குள் நுழைந்தன.

## அரை இறுதி போட்டிகள்

Messi Vs Modric என ரசிகர்களின் ஆர்ப்பரிப்புடன் இடம்பெற்ற Argentina Vs Croatia ஆட்டத்தில் Croatia அணியை இலகுவில் வென்று இறுதி ஆட்டத்துக்கு முன்னேறியது Argentina.

மற்றைய அரை இறுதி ஆட்டத்தில் உலக கால்பந்து ரசிகர்களின் எதிர்ப்பை மீறி Morocco அணியின் பயணத்தை அரை இறுதியுடன் முடித்து வைத்து இறுதி போட்டிக்குள் தொடர்ச்சியாக இரண்டாவது முறையாக நுழைந்தது France.

அரை இறுதியில் தோல்வியுற்ற Croatia மற்றும் Morocco அணிகளுக்கு இடையில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் Croatia அணி வெற்றி பெற்று 3 ஆம் இடத்தை தனதாக்கியது.

## Argentina Vs France இறுதி போட்டி

Messi உலக கிண்ணம் வெல்வதற்கான இறுதி வாய்ப்பில் நட்சத்திர வீரர்கள் அடங்கிய France அணியை எதிர்கொண்டது Argentina. மறுபுறம் நடப்பு சாம்பியன் ஆன France அணி கிண்ணத்தை தக்கவைக்கும் முனைப்பில் களமிறங்கியது.

உலகமே எதிர்பார்த்திருக்க உலக கிண்ணத்தை சுவீகரிக்க களமிறங்கின Argentina மற்றும் France. Messi எனும் நம்பிக்கையில் Argentina





அணியும் கடந்த உலக கிண்ணத்தில் Argentina அணியை 4-3 என வீழ்த்திய களிப்பில் France அணியும் களமிறங்கின.

ஆரம்பத்தில் ஆதிக்கம் செலுத்திய Argentina அணிக்கு Di Maria Penalty வாய்ப்பை பெற்று கொடுக்க அதை Goal ஆக மாற்றி இவ் உலக கிண்ணத்தில் குழு நிலைப் போட்டிகள், Round of 16, காலிறுதி, அரைஇறுதி மற்றும் இறுதி போட்டிகளில் Goal அடித்து புதிய சாதனையைப் படைத்தார் Messi. தொடர்ந்து Di Maria இன் Goal உடன் முதல் பாதியில் 2-0 என முன்னிலை பெற்றது Argentina.

இரண்டாம் பாதியில் சற்று ஆதிக்கம் செலுத்திய France அணிக்கு 80 ஆவது நிமிடத்தில் Mbappe அடுத்தடுத்த நிமிடங்களில் Goal அடித்து ஆட்டத்தை சமநிலைப்படுத்தினார். 80 ஆவது நிமிடம் வரை முன்னிலையில் இருந்த Argentina அணி அடுத்தடுத்து 2 Goal களை வழங்கி உலக கிண்ணத்தை நழுவவிடும் தறுவாயில் ஆட்டத்தின் 90 முழு நேரம் முடிவடைந்து மேலதிக நேரத்துக்கு ஆட்டம் நுழைந்தது. மேலதிக நேரத்தின் முதல் பாதியில் கோல் எதுவும் பெறப்படாத நிலையில் இரண்டாம் பாதியில் Messi Argentina அணிக்காக Goal அடுத்து ஏறத்தாழ உலக கிண்ணத்தை Argentina அணிக்கு உறுதிப்படுத்தினார்.

எனினும் மேலும் ஒரு திருப்புமுனையாக 118 ஆவது நிமிடத்தில் France அணிக்கு Mbappe Penalty மூலம் Goal அடித்து போட்டியை சமநிலைப்படுத்தினார். 3 Goal களையும் Mbappe அடித்து Hatrick சாதனை படைத்ததுடன் 1966 ஆம் ஆண்டின் பின் உலக கிண்ண இறுதி போட்டியில் Hatrick பதிவாவது இதுவே முதல் முறையாகும்.

தொடர்ந்து ஆட்டம் Penalty Kicks இற்கு செல்லும் என எதிர்பார்க்கப்பட்ட வேளையில் ஆட்டத்தின் இறுதி நிமிடத்தில் France அணிக்கு இலகுவான Goal அடிக்கும் வாய்ப்பு கிடைத்தும் Argentina அணியின் Goal காப்பாளர் Emi Martinez இன் சிறப்பான தடுப்பில் Argentina



அணி Goal வழங்காமல் ஆட்டத்தை சமநிலையில் முடித்தது.

ஆட்டம் Penalty Kicks இற்கு நகர்ந்தது. Penalty Kicks இல் Emi Martinez சிறப்பாக செயற்பட்டு 2 Goal களை தடுத்து Argentina அணிக்கு உலக கிண்ணத்தை பெற்று கொடுத்தார்.

ஒட்டு மொத்த கால்பந்து ரசிகர்களின் கொண்டாட்டத்துடன் உலக கிண்ணத்தை முத்தமிட்டு தன் வசப்படுத்தினார் கால்பந்து ஜாம்பவான் Lionel Messi.

கால்பந்து வரலாற்றில் நடைபெற்ற ஒரு சிறந்த போட்டியாக இப்போட்டி வரலாற்றில் இடம்பெற்றுள்ளது.

உலக கிண்ணத்துடன் Golden Ball விருதை Messi இரண்டாவது முறையாக கைப்பற்றியதுடன் இரண்டாவது உலக கிண்ணத்தை மயிரிழையில் தவறவிட்ட இளம் நாயகன் Mbappe Golden Boot விருதை பெற்றுக் கொண்டார். Argentina அணியின் தடுப்பு சுவர் Emi Martinez சிறந்த Goal காப்பாளராக தெரிவு செய்யப்பட்டார். இளம் வீரர் விருதை Argentina அணியின் Fernandez பெற்று கொண்டார்.

3 ஆவது முறையாக உலக கிண்ணத்தை வெற்றி கொண்டு 16 வருட ஐரோப்பிய அணிகளின் ஆதிக்கத்தை முறியடித்துள்ளது Argentina.

## சிவபூமியில் சிவலிங்கம்

07.12.2022, “யாழ்ப்பாணம் வரவேற்கிறது“ வளைவுக்கருகில், செம்மணி சிவபூமி வரவேற்பு நுழைவாயிலில் 07 அடி
உயரமான சிவலிங்கம் பிரதிஷ்டை செய்து கும்பாபிஷேகம் நடைபெற்றது.



